தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்;
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும் ;
தொடர்ந்து செல்வேன் !
ஏற்றதொரு கருத்தை
என்(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் ; எவர்
வரினும்
நில்லேன் ; அஞ்சேன் !"

ஆண்டு சந்தா 6—0—0
6 மாதச் சந்தா 3—0—0

உள் நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளி நாடு: மூன்றணா. | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-14.

மலர் 1 | சென்னை | 4—12—1954 | சனிக்கிழமை | இதழ் 23

இயற்கையிற் கலந்த தமிழ்ப் பழம் நீ!



"உழைப்பவனைத் தேடிப் பிடித்துச் சேர்த்தால் ஒரு கட்சிக்கு உன்னதமான கட்டுக் கோப்பு உண்டு. கிடைப்பவனைக் கொண்டு நடத்திச் செல்லும் போக்கு சிறந்த கட்டுக் கோப்பை யளிக்காது." நம் அறிஞர் அண்ணா அவர்களின் இந்த மணி வரிகளுக்கு ஏற்ப—கட்சியின் கட்டுக்கோப்பை வளர்க்கும் தொண்டர் பணியில் முன்அணியில் நின்றவர்—முகப்பில் நிற்பவர், நுங்கை வட்டத்து செயல்வீரர். பூக்காடாம் திராவிடத்திற்கு தன் கடமை செய்து சாக்காட்டில் புகுந்துவிட்ட வீரன். மாநில மாநாட்டின்போது கடமை உணர்ச்சிக்காக அண்ணாவால் பாராட்டப்பட்ட நெஞ்சுரம் கொண்டோன். நல்இளைஞன். நம் பழம் நீ !

இந்த இளம் விளக்கு—கொலைகாரர் ஆச்சாரியார் கொண்டுவந்த கல்வி திட்டத்தின்போது களம் கண்டார். கல்வித் திட்டத்தை எதிர்த்து அறப்போரில் ஈடுபட்டார். பாண்டி பசாரில் ஊர்வலம் செல்கிறது. கலையச் சொன்னார்கள் போலீஸ்காரர்கள். கலையவில்லை ; தாக்கினார்கள் தாக்கினார்கள், மண்டை பிளந்து மார்பகம் எல்லாம் ரத்தம் வழிய மலபார் போலீசார் தாக்கினார்கள். அப்பொழுதும் 'புதிய கல்வித் திட்டம் ஒழிக ! ஒழிக!' என்று கூறியபடியே சாய்ந்தார் ! சிறைபட்டார். சரியான உணவின்றி சிலநாள் வாடினார். கடுஞ்சுரம் அவரை அணைத்துக்கொண்டது. 29-8-54ல் மாண்டு போனார். ஒரு கொள்கை வீரன் மறைந்துபோனான்.

பழம் நீ! தாயகத்திற்கு உழைத்தார்; தொண்டாற்றினார்; கைத்தறித் துணிகளைத் தலையில் சுமந்து விற்றார். இப்படி அவர் நாட்டிற்குத்தந்தஉழைப்பு பெரிது. நுங்கை வட்டத்திற்கோ அதனினும் பெரிது. இன்று கல்லறையில் இருந்தபடியே கலங்கரையாக விளங்குகிறார் தொண்டர்களுக்கு; தொண்டர்களுக்கு மதிப்பளிக்கிற இயக்கம் தி.மு.க. என்பதால், அந்தக் கடமை வீரருக்கு வணக்கம் செலுத்துகிறோம். அவர் கல்லறைக்கு மரியாதை செய்கிறோம்.

"நானேறுகிறேன் நலிவின்றி நீ இருப்பாய். ஊனெடுத்தோம் என்ன பயன் ஊருக்கு உழைப்போம்!" ஆம் ! இதைத்தான் அவர் கல்லறை நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது!

எண்ணம்

கண்ணதாசன்

சென்னை மாநிலத்தில் சிறிது காலமாகத் தகராறு இல்லாமல் இருந்து வந்தது. பழைய குமார சாமிராசா அரசாங்கமோ, அடுத்த ஆச்சாரியார் அரசாங்கமோ செய்து வந்த மோசமான தவறுகளை, கூடியவரையில் காமராசர் அரசாங்கம் செய்யாமலிருந்ததே. இதற்குக் காரணம். ஆனால் அந்தப் பகுதி முடிந்து இப்போது, பழைய தவறான பகுதியிலேயே நடை போடுகிற புதுப்பகுதி இப்போது ஆரம்பமாகிறது. காமராசரிடம் அன்பு காட்டும் மக்கள்அனைவரும், காமராசர் எதைச் செய்தாலும் பொறுத்துக்கொள்வார்கள் என்கிற தப்புக்கணக்கோ என்னவோ, சென்னை அரசாங்கத்தின் செயலிலே பெருந்தவறுகள் ஆரம்பமாகின்றன.

முதற் பெருந்தவறாக, 1876-ம் ஆண்டு நாடகச் சட்டத்தைப் புதுப்பித்துச்சில பகுதிகளைச் சேர்த்துஅரசாங்கம் வெளியிட்டுள்ள செய்தியைச் சொல்லலாம். இந்தச் சட்டத்தின்படி, அரசாங்கத்திற்கோ அல்லது அதை நடத்துகின்ற கட்சிக்கோ அல்லது அந்தக் கட்சியில் இடம் பிடித்துக்கொண்டிருக்கும் ஒரு குழுவுக்கோ பிடிக்காத எந்த நாடகத்தையும் 'தற்காலிகமாக' தடை செய்துவிடலாம். தடை செய்யப்பட்ட நாடகங்கள் நடிக்கப்பட்டால் சிறையில் தள்ளலாம். சுருங்கச் சொன்னால், திராவிட இயக்கத்தினர் பகுத்தறிவு நாடகமே நடத்தக் கூடாது என இந்தச் சட்டம் சொல்லாமல் சொல்கிறது. யார் செய்த சூதோ, எவர் வைத்த தீயோ, காமராசர்பால் வெறுப்பைத் துவக்கும் புதிய மசோதா வெளிச்சம் போடப்போகிறது. இந்த மசோதா பிறப்பதற்கு மூலகாரணம் என்ன என்பதைக்கூற வெகு நேரம் பிடிக்காது. நடிகவேள் ராதாவின் 'ராமாயணம்' தான் அரசாங்கத்தை இந்தக் கட்டத்தில் கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது. ஆயினும், இந்த மசோதாவின் மூலம் திராவிட இயக்கத்தின் நாடகத்துறை முழுதும் பாதிக்கப்படும்.

'குடிமக்களிடையே ஒருவர்க்கொருவர் துவேஷமூட்டுவதும், மத முறையைக் கேலிசெய்வதன் மூலம் குறிப்பிட்ட மதத்தாரின் உணர்ச்சிகளைப் புண்படுத்துவதும் சட்ட விரோதம்' என்பது, இந்த மசோதாவின் மூலம் புதிதாகக் குடியேறியிருக்கும் இரண்டு அம்சங்களாகும். இதன் ஆதரவில், யாரும், எந்த நாடகத்தையும் தடை செய்யத் தூண்டலாம்.

"எசமான் மட்டும் கறி சாப்பிடுகிறாரே! எனக்கு ஏன் இல்லை?" என்று, ஒரு நாடகத்தில் வேலைக்காரன் பேசினால், பணக்காரருக்கு எதிராக துவேஷமூட்டுவதாக தடை செய்யலாம்.

"எல்லாரும் உடல் உழைப்பால் வாழ்கிறார்களே; நீங்கள் மட்டும் உழைக்காமல் இருக்கிறீர்களே, சாமி." என்று பார்ப்பனரை, வேறொருவர் 'காந்திய முறை'யில் கேட்டாலும், பார்ப்பனருக்கு எதிராக துவேஷமூட்டுவதாக தடை செய்யலாம்.

"கணவன் தாசி வீட்டுக்குப் போகிறான்! இப்படிப்பட்ட கணவர்களை வீட்டுக்குள் சேர்க்கக்கூடாது!" என்று ஏகம்பவாணன் மனைவியின் பாஷையில், எந்த மனைவியாவது—நாடகத்தில்—பேசினால், கணவர்களுக்கு எதிராக துவேஷமூட்டுவதாகக்கூட தடை செய்யலாம்!

பொதுவாக, திராவிட இயக்கத்தின் எந்த நாடகத்தையும் தடை செய்யலாம். அதன்றியும், முன்கூட்டியே நாடகக் கதையின் நகலை, பரிசீலனைக்குக் கொண்டுவரக் கோரும் விதியும் இந்த மசோதாவில் இருக்கிறது! 'மக்கள் ஆட்சி'யில் அங்கீகரிக்கப்பட்ட 'எழுத்துரிமை' முழுதும் இதன் மூலம் பறிக்கப்படுகிறது.

ஒரு கட்டம் முடிந்தது; மறு கட்டம் துவங்குகிறது; இனி திராவிட இயக்கத்திற்கு நிறைய வேலை இருக்கும்போலிருக்கிறது. பல, நாடக நடிகத் தோழர்கள் சிறை புக நேரலாம்! பின் என்ன செய்வது! இதையும் பொறுத்துக் கொண்டு எப்படி வாழ்வது! ஏதோ, நமக்கும் அவருக்கும் 'பிராப்தம்' அவ்வளவுதான்! உள்ளே இருக்கிற நாசகாரர்கள் வைத்த தீ, இந்த மசோதாவை உருவாக்கி, இதுவரை இருந்த சூழ்நிலையை மாற்றி அமைத்துவிட்டது. நாம் இனி தயாராக இருக்கவேண்டியதுதான். புதிய சட்டத்தை மீறி சில நாடகங்கள் நடத்தப்படவேண்டிய நிலை எப்பொழுது ஏற்படலாம்!—எல்லாம், இந்தச் சட்டத்தோடு, அரசாங்கம் நடந்துகொள்ளும் விதத்தைப் பொறுத்திருக்கிறது!

குறிப்பாகப் பார்த்தோமானால், நாட்டிலே நடைபெறும் நானாவித நாடகங்களிலும் திராவிட இயக்கத்தின் நாடகங்கள்தான் அதிகம் செல்வாக்குப் பெற்றுள்ளன. பொறாமையில் இரண்டறக் கலந்த சிலர் இது கண்டுபொறாது, சில தினப்பத்திரிகைகளில் "கடிதங்கள்" எழுதினர். அந்தந்த ஊர்களிலே, வேறு வேலையின்றி இருந்த சில நாலாந்தரங்கள் "அப்படிச் செய்வோம்! இப்படிச் செய்வோம்" என்று உட்கார்ந்தபடியே உறுமின. ஓடிப்போன சரோஜாவின் செய்தியையும், ஊரில் அலைந்த பாஞ்சாலியின் செய்தியையும் கவர்னரின் செய்தி போல வெளியிடும் தினத்தந்தி, இவற்றைப் பிரசுரித்தது. கூட்டிச் சுருக்கினோமானால், எந்தத் தகுதியும் இல்லாமல் சம்பளத்துக்குக் கொள்கை முழக்கும் சிலர்தான் நமது நாடகங்கள் நாட்டைக் கெடுப்பதாகக் கூறினர்; அறிவுடையோர், அவை அறிவை வளர்ப்பதாகத்தான் கூறினர். அரசாங்கத்தின் புதிய மசோதாவுக்கு சிலரது கூச்சல்தான் காரணமென்றால், இத்தகைய 'தொடை நடுங்கி' அரசாங்கம்எப்படிச் சென்னைமாநிலத்தை, நீடித்துக் காப்பாற்றப்போகிறது என்பது நமக்குப் புரியவில்லை. 'தீபாவளித் துப்பாக்கி'க்குப் பயந்து சிம்மாசனத்தைவிட்டு இறங்குகிற மன்னனைப்போல நமது மந்திரிகள் பரிதாபத்துக்குரியவர்கள் என்றுதான் கூறத் தோன்றுகிறது.

அல்லது உண்மையிலேயே நமது நாடகங்களின்மீது, அரசியலாரே வெறுப்புக்கொண்டுள்ளனர் என்றால்—அதனால்தான் இந்த மசோதா-என்றால்-நமக்கு வேலை இனி அதிகம்தான்! காட்டிக் கொடுத்த விடணனை, பரமயோக்கியனாகவும், தமிழனைக் கொன்ற ஆரியனைப் பெரியவீரனாகவும் காட்டி நடத்தப்பட்ட நாடகங்களை நாம் பலகாலம் பொறுத்திருக்கிறோம். உண்மையை அப்படியே கூறும் நாடகங்கள், அரசியலாருக்குப் பிடிக்காதவை என்பதற்காக, தடை செய்யப்படுவதென்றால் பொறுத்துக்கொண்டிருக்கமாட்டோம். அதிகாரம் அவர்கள் கையில் இருப்பதால் சட்டம் கொண்டுவந்து விட்டார்கள்; மக்கள் சக்தி நம்மிடம் இருப்பதால், நாம் என்ன செய்ய முடியுமோ அதைச் செய்துதானே தீரவேண்டும்!

★

இன்னொரு புதுமை, சில நாட்களுக்கு முன்பு சென்னை மாநிலத்தில் நடைபெற்றுள்ளது. சென்னையிலிருந்து சிறந்த நாடகம் என்ற பெயரில் ஒரு நாடகம் டில்லிக்குப் போயிருப்பதை நண்பர்கள் அறிவார்கள். தமிழ் நாட்டிலே நல்ல நாடகக் குழுவினர் எத்தனை பேர் உண்டோ, அத்தனை பேரையும் விட்டுவிட்டு, சில 'அமெச்சூர்'களின் மகா மட்டமான ஒரு நாடகமும்—சிவகாமியின் சபதம்—நடிகர்களும் டில்லி சென்றுள்ளனர்.

பத்தினிப் போட்டிக்குப்பாஞ்சாலி போவது போல, அழகுப் போட்டிக்கு ஔவையார் போவதுபோல, பகுத்தறிவுப் போட்டிக்கு ஆச்சாரியார் போவதுபோல-'சிவகாமியின் சபதம்' டில்லிக்குப் போயிருக்கிறது. இதில் நடிக்கும் நடிகர்களைக் காட்டிலும் இதைத் தேர்ந்தெடுத்த அறிவாளி(?)கள் பாராட்டப்படவேண்டியவர்கள். அவர்கள்தான் அனைத்திந்திய உப கண்டத்திலும் தலை சிறந்த நடிகர்கள்!

இந்த நாடகத்தை டில்லி மக்கள் பார்த்துவிட்டு, தென்னாட்டின் நாடகத் துறையையே கணக்குப் போடலாம்! அப்போது, இந்திய உபகண்டத்திலேயே, நாடகத் துறையில் மகா மட்டமான பகுதி தென்னாடு என்கிற முடிவு, வெள்ளிடை மலையெனத் தோன்றும்! அதைப் பற்றிக்கூட நமக்குக் கவலை இல்லை. குரங்கிலிருந்துதான் மனிதன் தோன்றினான் என்பதற்காக குரங்குகளெல்லாம் மனிதர்களே என்று முடிவுகட்டினால் நாமென்ன செய்வது!

நமக்கிருக்கிற பெருங்கவலை ஒன்றுதான்! 'சிவகாமியின் சபதம்' கல்லெறி படாமல் திரும்பவேண்டும் என்பதுதான் அது! போயிருக்கிற நடிகர்கள், பாவம், நல்ல பிள்ளைகள். ஏதோ, தேர்ந்தெடுத்த திறமைசாலிகள் இதுதான் சிறந்த நாடகம் என்று தேர்ந்தெடுத்தனர். அந்த நடிகர்களும், "நம் நாடகம் தானா சிறந்த நாடகம்?" என்ற குழப்பத்தோடு டில்லி சென்றுள்ளனர்! இந்த வேடிக்கையை, கல்வெட்டாக எழுதி வைத்து எதிர்கால சந்ததிகளின் பார்வைக்கு வைத்தால், நன்றாயிருக்கும்; தேர்ந்தெடுத்தவர்களின் நாடக ஞானம், அவுரங்கசீபின் சங்கீத ஞானத்திலும் உயர்ந்தது என்று எதிர்கால சந்ததிகள் பாராட்டுவர்!

சிறு பொருள் விளக்கம்: 3

★ பெருங்காயம் ★

இது, பாரசீகம், துர்க்கிஸ்தானம் ஆப்கானிஸ்தானம், காஷ்மீரம், பஞ்சாப் முதலிய இடங்களில் தன்னிச்சையாயும், அபரிமிதமாயும் பயிராகும் ஓர்வகைச் சிறு செடியின் பால் அல்லது பிசின். இந்திய உபகண்டத்தின் எல்லாவிடங்களிலும் கடைகளில் விற்கப்படுகிறது. அநேக நூற்றாண்டுகளாக மக்கள் தாங்கள் உண்ணும் உணவிற்குரிய பதார்த்தங்களிலும் நோய் தீர்க்கும் மருந்துகளிலும் உபயோகித்து வருகின்றனர்.

இது மஞ்சள் நிறம். அதிக வாசனையுள்ளது. சற்றேறக் குறைய வெள்ளைப்பூண்டினது வாசனை வீசும். கரகரப்புடன் மிகவும் கசப்புடையது. சாராயத்தில் கரையும். நீர் விட்டரைத்தால் பால் நிறமாயிருக்கும். சாரங்களுடன் கூடின் பொடிபடும்.

இதில் ஓர்வகை வெண்ணிறம் பொருந்தியதுமுண்டு. 'சோம காயம்' எனப் பெயர். இது மேற்கூறிய காயத்திலும் அதிக வீரியமுடையது.

குறிப்பு:-இது முக்கியமாய் இரத்தத்தைச் சூடாக்கி, நரம்புகளை வெப்பப்படுத்தும். இருதய ஓட்டத்துக்குக் கிளர்ச்சியை யுண்டாக்கும். இதைத் தொடர்ச்சியாகச் சாப்பிட்டு வரின் தொண்டைப்புண், வயிறு உப்பல், அசீரணபேதி, மூத்திர எரிச்சல், புளியேப்பம் இவைகளை யுண்டு பண்ணும்.

குணம்:—இதனால் தந்தரோகம், தந்தமூலரோகம், சகல சர்ப்பவிடம் தேள்விடம், கிருமி, அசீர்ணம், வாதாதிக்கம். உதாவர்த்தவாதம், யோனிரோகம், இருதவாயு, எண்வகைக் குன்மம், உதரரோகம், கருப்பவித்திரதி, சூலை, இரத்தக் கிருமி, கபநோய், தேகக் குடைச்சல் ஆகியவை நீங்கும்.

அளவு இரண்டரை முதல் பத்து குன்றிமணி எடை.

இதைப் பொரித்து உபயோகித்தலே நலம். பச்சையாய் உபயோகிக்கில், வாந்தி யுண்டாக்கும்; தலை சுற்றும்; பித்தத்தைப் பிரகோபிக்கச் செய்யும்.

பெருங்காயக் கலவை மெழுகு: காயம் 2, கால் பேனம் (Galbanum) என்று வழங்கும் கந்தபிரோஜா 2, வெள்ளைப் போளம் 2, வெல்லப் பாகு (Treacle) 1; ஒன்று கூட்டி ஜலேந்திரத்தில் வைத்து உருக்கி யாவும் ஒன்று சேருகிறவரையில் துழாவிக் கொடுத்து எடுத்து உபயோகிக்கவும். இதைச் சூதக வலியுடைய பெண்களுக்குக் காணும் அசீரணத்துக்குக் கொடுக்கவும்.

அளவு இரண்டரை முதல் ஐந்து குன்றிமணி எடை.

(11-ம் பக்கம் பார்க்க)

பர்மியத் தலைநகரில் பயங்கரக் கொலை!

பயங்கர சம்பவங்களை உயிரோட்டமாகக் கொண்டு செல்லும் கதைகளில் சிலருக்கு தணியாத ஆசை! சோக நிகழ்ச்சிகள் பின்னப்பட்டிருக்கும் கதையெனிலோ, ஒரே மூச்சில் படித்து முடிக்கும்பொழுது ஒரு சொட்டு கண்ணீர் விட்டு விட்டுத்தான் புத்தகத்தை மூடிவைப்பர் பலர், இருள் சூழ்ந்த அந்தக் குகையில் அலாவுதீன் தேம்பிக்கொண் டிருந்தான். திடீரென ஒரு சப்தம்! பாறை பிளந்து சரிந்தது...இப்படி துவக்கப்படும் கதைகளில் சிலருக்கு உயிர். காரணம் பயங்கர சம்பவங்களிலும் - அவலத்திலும்கூட சுவை காணுகிறது மனித உள்ளம். சில ஆண்டுகளுக்குமுன் பர்மாவில் நடந்த படுகொலை, உலகின் கவனத்தையே கவர்ந்துவிட்டது. இப்படியும் நடந்ததா? என்று வியப்பு மேலிட்டனர். நினைத்தாலே நெஞ்சு திடுக்கிடும் சம்பவம் 19-7-1947-ல் பர்மாவில் நடந்தது. பட்டப்பகலில் மந்திரிசபை நடந்துகொண் டிருக்கும்பொழுதே ஏழு மந்திரிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொலை செய்த கூட்டத்தின் தலைவனும் ஒரு மந்திரி. பெயர் கலூான் ஊசோ! இந்தப் படுகொலை - இந்திய உபகண்டத்தில் காந்தியார் கொல்லப்பட்ட சம்பவம் தந்த அதிர்ச்சியைவிடப் பெரியது; காந்தியார் கொல்லப்பட்டபின் இந்திய உபகண்டத்தின் அரசியல் தெளிவும் - பொலிவும் கெட்டு - சீரழிந்து வருவதுபோல - பர்மா அரசியலிலும் இந்த படுகொலைக்குப் பிறகு சீரழிவு ஏற்பட்டது. பர்மாவில் நடந்த அந்தப் படுகொலை-அதன் வழக்கு-தீர்ப்பு முதலியவற்றை பல ஆங்கில வெளியீடுகளிலிருந்தும் - செய்தித்தாள்களிலிருந்தும் - புத்தகங்களிலிருந்தும் இங்கே தொகுத்துத் தருகிறோம். தொடர்ந்தும் தருவோம். பழைய சம்பவங்கள்தான் என்றாலும் மீண்டும் ஒரு முறை நினைவிற்கு கொண்டுவந்து நிறுத்திப்பார்ப்போமே! சுவை இல்லாமலா போய்விடும்!

வானளாவிநின்ற ரங்கூன் உயர் நீதிமன்றத்தில் ஒரே கூட்டம்! எங்கெங்கு நோக்கினும் மக்கள் வெள்ளம். எல்லோர் முகங்களும் கேள்விக் குறிகளாக மாறி விட்டிருந்தன. அணி வகுத்துச் செல்லும் அரசியல் அதிகாரிகளும்-வரிசை வரிசையாக நடந்து செல்லும் கருப்புடை அணிந்த வக்கீல்களும் தூக்கிய துப்பாக்கியை தோளில் சாய்த்தபடி காவல் காத்து நின்ற போலீஸ் - ரிவால்வர்களில் கைவைத்தபடியே மேற்பார்வை செய்து கொண்டிருந்த இன்ஸ்பெக்டர்களும்.... அப்பப்பா!...எவ்வளவு பரப்பரப்பையும்-மக்களிடையே பீதியையும் உண்டாக்கிற்று, அந்த சம்பவம்!

காலை 10-45 மணி. ரங்கூன் ஸ்பெஷல் கோர்ட்டின் தலைவரான மிஸ்டர் ஜஸ்டிஸ்சோமின் அவர்கள் இதர இரண்டு நீதிபதிகளான ஊஅவுங்தா ஊஸிபூ, ஆகியோருடன் கோர்ட் அறைக்குள் நுழைந்து அவரவர்களின் ஆசனங்களில் அமர்ந்தனர்.

எங்கும் நிசப்தம் நிலவியது கோர்ட்டில் பர்மா கவர்ன்மெண்டின் அட்வகேட் ஜெனரல் ஊட்டுன் பியூ அவர்கள் நீதிபதிகள் முன் பிரசன்னமாகி, 1947-ம் வருடம் ஜூலை மாதம் 19-ந்தேதி காலையில் ரெங்கோன் செக்ரெடேரியட் கட்டிடத்தில் மந்திரிமார்களின் நிர்வாகக் கவுன்ஸில் சபைக்கூட்டம் நடந்து கொண் டிருக்கையில் மந்திரிமார்களான ஹானரபிள் ஊ அவுங்சான், தபகின் மியா, ஊபாவின், ஊபாச்சோ, மிஸ்டர் ஏ. ரஜாக், மாங்பாகாய்ங், மாங்பாங் சோபுவா ஆகியோரையும் மற்றும் ஊ ஒன்மவுங், மவுங் டுவே ஆகியோரையும் படுகொலை புரிந்ததை விசாரிப்பதற்காக கனம் பர்மா கவர்னர் ஸ்பெஷல் கோர்ட்டை ஏற்படுத்த வெளியிட்ட அரசாங்க உத்திரவை நீதிபதிகள் முன் சமர்ப்பித்தன.

இவ்வழக்கில் எதிரிகள் 10 பேர். அதாவது [1] ஊசோ [2] மவுங்சோ [3] தேனி [4] மவுங் செயின் [5] யாங்ஜீ அவுங் [6] தூக்கா [7] கின் மவுங்யின் [8] மவுங்னீ [9] மோன்ஜீ [10] பாஞ்ஞான்.

பினல் கோடு 302-34, 302-114, 302-109, 302-120, (B) செக்ஷன்களின்படி ரெங்கோன் போலீஸ் கமிஷனர் ஊ அவுங் செயின் எதிரிகள் மீது பிரியாதை தாக்கல் செய்துள்ளார்.

வீட்டை வளைத்தனர்!

மேற்படி மந்திரிமார்கள் கொலை செய்யப்பட்ட தினத்தன்று போலீசார் ரெங்கோன் ஆடி ரோடில் 4-ம் நம்பருள்ள ஊசோ வீட்டை வளைத்துக் கொண்டு மேற்படி எதிரிகளை கைது செய்தார்கள் - போலிசார் மேற்கொண்டு விசாரித்ததில், மேற்படி எதிரிகள் கவர்னர் நிர்வாக கவுன்ஸில் மந்திரி மார்களைப் படுகொலை புரிய சதியாலோசனை செய்ததாகத் தெரிய வந்ததுடன் எதிரிகளான மவுங்சோ, தேனி, மவுங் செய்ன், யாங்ஜீ, அவுங் ஆகிய நால்வருமே மந்திரிமார்கள் சபா மண்டபத்திற்குள் நுழைந்து அங்கிருந்தோரை சுட்டுக் கொன்றதாக தெரிய வந்தது. எதிரிகளில் ஒருவனான யாங்ஜீ அவுங் என்பவன் தான் மவுங் டுவே என்பவரை சுட்டு வீழ்த்தியதாக தெரிய வந்தது.

கவர்ன்மெண்ட் அட்வகேட் மேற்கூறியவாறு பேசி முடிந்ததும் ஸ்பெஷல் கோர்ட்டு தலைவர் மேற்படி பிரியாதை அங்கிகரித்துக் கொண்டு எதிரிகளை கைது செய்வதற்குறிய வாரண்டுகளை பிறப்பிக்க உத்திரவிட்டார்.

இதன் பின்னர் அட்வகேட்-ஜெனரல் நீதிபதிகள் முன் தெரிவித்ததாவது:—

" கனம் நீதிபதிகளே, இது சாதாரண விசாரணை அல்ல வென்பதையும், இப் படு கொலைகள் பர்மா தேசத்திலேயே ஒரு அதிர்ச்சியை உண்டாக்கி விட்ட தென்பதையும் தங்களுக்கு தெரிவிப்பதுடன், இவ் விசாரணை அனேக நாட்கள் வரை நடை பெறலா மென்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்விசாரணையில் குறைந்தது 120 சாட்சிகள் கோர்ட்டில் ஆஜராக வேண்டும். மேலும் எதிரிகளில் பெரும்பாலோர் தற்போது இன்சின் ஜெயிலில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை நாள் தோறும் ஐக்கோர்ட்டுக்கு கொண்டு வந்து மீண்டும் இன்சின் ஜெயிலுக்கு அதிக பந்தோபஸ்துடன் கொண்டு போய்ச் சேர்ப்பதில் மிகப் பெரிய பொறுப்புகள். ஏற்படும், ஆனதால், இன்சின் ஜெயிலுக்குள்ளேயே விசாரணையை நடத்துவது உசிதமென நான் கோர்ட்டாருக்கு தெரிவித்துக் கொள்ளுகிறேன்."

ஜயிலில் விசாரணை

கவர்ன்மெண்ட் அட்வகேட் பேசி முடிந்ததும் ஸ்பெஷல் கோர்ட்டு தலைவர் பின் வருமாறு தெரிவித்தார்:—

" பர்மாவின் தற்கால நிலைமை ஒரு தினுசாக இருந்து வருவதால் இவ்விசாரணை இன்சீன் ஜெயிலுக்குள் நடை பெற வேண்டுமென நான் உத்திரவிடுகிறேன். அவ்வாறு இன்சீன் ஜெயிலுக்குள் நடைபெற்ற போதிலும், இது பஹிரங்கமான விசாரணையாக இருக்குமே யொழிய ரகஸிய விசாரணையாக இருக்கப் போவதில்லை. அக்டோபர் மாதம் 8-ந்தேதியன்று காலை 10 மணிக்கு இவ்விசாரணை இன்சீன் ஜெயிலில் ஆரம்பமாகும்.

சனிக்கிழமைகளும், ஞயிற்றுக் கிழமைகளும், மற்றும் விடுமுறை நாட்களும் நீங்கலாக இதர தினங்களில் ஒவ்வொரு நாளும் காலை 10 மணி முதல் 1-மணி வரையிலும் மீண்டும் 1-30 மணி முதல் 3-30 மணி வரையிலும் விசாரணை நடை பெறும்."

கோர்ட்டு தலைவர் இவ்வாறு தெரிவித்த பின்னர். எதிரிகளுக்காக எதிர்வாதம் செய்ய லாயர்கள் உண்டா என்பதாகக் கேட்டார். இது வரையில் எதிரிகளுக்கு லாயர்கள் இருப்பதாக தனக்குத் தெரிவிக்கப் படவில்லையென அட்வகேட் ஜெனரல் கூறினார். லாயர்களை அமைத்துக் கொள்ள எந்தெந்த எதிரிக்கு சக்தியில்லையோ அவர்களுக்கு லாயர்களை ஏற்படுத்த அதிகாரிகள் ஏற்பாடு செய்யவேண்டுமென கோர்ட்டு தலைவர் தெரிவித்தார். செப்டம்பர் 26-ந்தேதிக்குள் பிராஸிகூஷன் தரப்பு சாட்சிகள் ஜாபிதாவை தாக்கல் செய்யவேண்டுமென கோர்ட்டு தலைவர் அட்வகேட் — ஜெனரலுக்கு உத்திரவிட்டார்.

இத்துடன் இன்றைய கோர்ட்டு காரியங்கள் முடிவுற்றது.

★

இரங்கோன், அக்டோபர் 8, 1947

மந்திரிமார்கள் கொலை வழக்கு சம்பந்தமாக இன்று இன்சீன் ஜெயிலில் கேஸ் விசாரணை ஆரம்பமாகியது.

கேஸ் விசாரணையைக் கேட்க உள்ளூர் பத்திரிகை நிருபர்களும் அயல் தேச பத்திரிகை நிருபர்களுமாக சுமார் 40 பேர்வரை வந்திருந்தனர். மற்றும் ஊஸோ மனைவி டோதான் கின், மகள் பேபினோ, ஊஸோ மாமனுர் ஊலூகலே முதலியோர் முன்கூட்டியே வந்திருந்தனர். பத்திரிகை நிருபர்களும் மற்றவர்களும் தகுந்த பரிசோதனையின் பேரில் சரியாக காலை 9-30 மணிக்கு விசாரணை செய்யும் அறைக்குள் அனுமதிக்கப்பட்டனர். அங்கே கவர்ன்மென்ட் வக்கீல் ஊடுன் பியூ மற்றும் அவருக்கு பக்க துணையாக அட்வோகேட் எல். சூன் போங், ஊமிரா தெய்ன் ஆகியோர் ஆஜராயிருந்தனர்.

சரியாக 10-30 மணிக்கு குற்றவாளிகள் தக்க ஆயுதப் போலீஸ் பாராவுடன் கொண்டுவரப்பட்டார்கள். சரியாக 11-10 மணிக்கு இக்கொலை வழக்கில் முதல் நெம்பர் எதிரியான ஊஸோ சுற்றிலும் பலத்த பாராவுடன் கொண்டுவரப்பட்டார். ஊஸோ அதிக முகமலர்ச்சியுடன் பச்சைநிற பாங்காங் லுங்கியுடனும், அழகான பர்மிய கோட்டுடனும், குளிர்ச்சிக்கண்ணாடி அணிந்து குற்றவாளிகளுக்கு ஏற்படுத்திய கூண்டிற்குள் நுழையும்பொழுது அதிக சந்தோஷத்துடன் "என்னுடைய இடம் எங்கே" என்று கேட்டுக் கொண்டு அவருக்காக குற்றவாளிகளுடன் தனியாக ஏற்பாடு செய்திருந்த நாற்காலியில் அமர்ந்தார்.

உடனே ஸ்பெஷல் கோர்ட் பிரதம நீதிபதி ஊச்சோமின், நீதிபதி ஊசிபு, நீதிபதி ஊ அவுன்தான் ஜோ நுகிய மூவரும் பிரசன்னமாகி அவர்களுடைய ஸ்தானத்தில் அமர்ந்தார்கள். கேஸ் விசாரணை செய்யும் அறையைச் சுற்றிலும் ஆயுதந்தாங்கிய போலீஸார் மிகுந்த எச்சரிக்கையாக காவல் புரிந்து வந்தனர்.

ஊச்சோமன் :—இன்று 10 மணிக்கு ஆரம்பிக்கவேண்டி இருந்த விசாரணை குற்றவாளிகளை கொண்டுவருவதில் காலதாமதமேற்பட்டதால் சற்று நேரமாகி விட்டது. இருந்தாலும் தினசரி காலை 10 மணிக்குள் இந்த ஜெயிலில் சரியான ஏற்பாடுகள் செய்யப்படாவிடில் இக்கேஸ் விசாரணையை இரங்கோனில் நடத்தலாமென்று நினைத்துவருகிறோம். மற்றும் இன்று ஊஸோ தரப்பில் வாதாடுவதற்காக லாயர்கள் வரவில்லையாதலால் அரசாங்கத்தார் லாயர்களை ஏற்படுத்துவதுபற்றி கவர்ன்மெண்ட் வக்கீல் தமதபிப்பிராயத்தை தெரிவிப்பாரா?

ஊடுன் பியூ :—குற்றவாளிகள் முறையே வரிசைக் கிரமமாக 1. ஊஸோ, 2. மவுங்சோ, 3. தேட்நீ, 4. செய்ன்ஜீ, 5. யான்ஜீ அவுங், 6. தூகா, 7. கீன்மவுன் யீன், 8. மவுன்நீ, 9. பொவுன்ஜீ முதலியோர் ஆஜர் படுத்தப்பட்டுள்ளனர். 10-ம் நம்பர் குற்றவாளியாகிய பானுன் என்பவன் கவர்ன்மெண்ட் சாட்சியாகிவிட்டபடியால், அவன் கொண்டுவரப்படவில்லை. குற்றவாளிகளுக்கு லாயர்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊச்சோமின் :—ஊஸோ அவர்களே, நீர் ஏற்கனவே பர்மாவின் பிரதம மந்திரியாக இருந்து வந்திருக்கிறீர்கள். ஆனதால் தங்களுக்கு நான் அதிகமாக சொல்ல வேண்டியிருந்தால் தாராளமாய்த் தெரிவிக்கலாம்.

(தொடரும்)

கவிஞர் முடியரசன்

காரைக்குடி கலைமகள் அச்சகத்திற்குத் 'தென்றல்' வந்தது. அங்கிருந்த நண்பர்கள் ஒவ்வொருவரும் அதை முதலில் நுகர்ந்துவிட முந்தினார்கள். அதன் விளைவாக, அடுத்த கணம் கைக்கு ஒரு ஏடாக காட்சியளித்தது 'தென்றல்'. அரட்டைப் புயலிலே அழுந்தியிருந்த நண்பர்களிடையே 'தென்றல்' விளைத்துவிட்ட அமைதியைப் பார்த்து அனுபவிக்கவேண்டியவனானேன் நான். காரணம், என் கைகளுக்கும் கண்களுக்கும் எட்டாதஇடங்களிலே 'தென்றல்' இருந்ததுதான்!

"நம்ம கண்ணதாசன் மதுரையில் பேசியிருக்கிறாரே" என்றது வள்ளியப்பன் குரல்.

'இவ்வளவுதானா, இதை நான் 'தமிழ் நாட்டில் படித்துவிட்டேன்' இது என் ஆத்திரம்.

"பேச்சு முழுதும் வந்திருக்கிறதே இங்கு..." பக்கத்தில் இருந்த பழனியப்பன் குரல் இது. மேலும், "அது மட்டுமா, ஒரு முக்கியமான செய்தி. கண்ணதாசன் தியாகராசர் கல்லூரியிற் பேசும்போது வாணிதாசனையும், முடியரசனையும் பாராட்டி யிருக்கிறார்" என்றார்கள் என் எதிரிகள், அதாவது என் எதிரிலே இருந்தவர்கள்.

"பேசியிருப்பதென்ன, வாணிதாசன் வரலாற்றையே வெளியிட்டிருக்கிறார்- அறிவழகன் அழகாக எழுதியிருக்கிறார்" என்று நண்பர் ஒருவர் கூறினார் மறுபடியும் அவரே முடியரசனைப் பற்றியும் யாராவது எழுதுங்களேன் ஐயா, இங்கேயே இருக்கிறவர்கள்" என்று சொல்விட்டு என்னைப் பார்த்தார், திருக்குறள் படித்த எனக்குக் 'குறிப்பறிதல்' பழக்கம் உண்டோ என ஆராய்வார்போல. "ஆம் முடியரசனைப் பற்றித் தெரியாதவர்களும் தெரிந்துகொள்ள வேண்டியதுதான். அதற்கு ஒரு கட்டுரையும் தேவைதான் என்று நான் எண்ணினேன். பிறகு இதை எழுதினேன்.

◉

பிறகு முடியரசனை எங்கே சந்திப்பது? எப்படிப் பேட்டி காண்பது? என்ன என்ன கேட்பது என்று சிந்தித்தோம். அவர் வீடு வாடகை வீடுதான். வெகு தூரம். அதுதான் காரைக்குடியின் தென் கிழக்கு எல்லையாகும். அரியக்குடி போகும் வழியும் ஆகும். எனவே நான் கொஞ்சம் தயங்கினேன்- உடனே வள்ளியப்பனின் குரல் கேட்டது. பயப்படாதீர்கள், சற்று நேரத்தில் முடியரசன் இங்கு வருவார். போக்கற்ற தமிழ் வாத்தியார்களுக்கு இக்'கலைமகள் தானே' புகலிடம் என்று. அவர் கூறியபடியே முடியரசனும் அங்கு வந்தார். அவருக்கு காபி ஒன்று வாங்கிக் கொடுத்துவிட்டு கேள்விகளை அடுக்கினோம். அவரும் சிந்தித்து, நிறுத்திப் பதில்களைச்சொன்னார். சில இடங்களில் அடித்துச் சொன்னார்; அவற்றைத் தடித்த எழுத்துக்களில் போட்டிருக்கிறோம்.

கேள்வி: நீங்கள் ஒரு நாளைக்கு 24-மணி நேரமும் நண்பர்களிடையே காணப்படுகிறீர்களே, உங்களுக்கு அதிக அன்பு குடும்பத்திடமா? நண்பர்களிடமா?

பதில்: அப்படிக் கேட்காதீர்கள். காதலியிடமா, நண்பர்களிடமா என்று கேட்டால் நண்பரிடம்தான் என்பேன்.

கேள்வி: உங்களுக்குப் பிடித்த இலக்கியம்.

பதில்: சங்க இலக்கியம்.

கேள்வி: பிடித்த சுவை.

பதில்: அவலச்சுவை. உணவில் எல்லாச் சுவையும் பிடிக்கும். சுவையாக சமைக்கப்பட்டிருந்தால்

கேள்வி: உங்களுக்குப் பிடித்த பிறநாட்டு இலக்கிய மேதைகள்.

பதில்: கார்க்கி, காண்டேகர், வேர்ட்ஸ்வொர்த்.

கேள்வி: இப்போது கவிஞர்களில்...

பதில்: பாரதிதாசனை என்ஆசானாக, வழிகாட்டியாகக் கருதுகிறேன்.

கேள்வி: தங்கள்பால் தொடர்பும், ஈடுபாடும் உடைய கவிஞர்கள் உண்டா?

பதில்: உண்டு. நான் தொடர்பும் ஈடுபாடும் கொண்டுள்ள கவிஞர்கள் வாணியண்ணன் [வாணிதாசன்], நம்ம கண்ணதாசன், நண்பர் சாமி. பழனியப்பன் ஆவர்.

கேள்வி: உங்கள் மனதில் நீங்காத இடம் பெற்ற பத்திரிகை எது?

பதில்: 'பொன்னி'தான். இப்போது தமிழ் நாடு, கலைக்கதிர்' தென்றல், முரசொலி படிப்பதுண்டு.



கவிஞரும் அவரது மனைவியாரும்

கேள்வி: உங்கள் வாழ்வுக்கு வேண்டும் வசதிகள் யாவை?

பதில்: அதைப் பாட்டாகப் பாடி இருக்கிறேன்-

"குணத்தாலும் உடலாலும்
அழகு மிக்க
குமரிளனை மணந்தின்பம்
கொடுக்க வேண்டும்!
மனத்தோடு தென்றல்வந்து
உலவுகின்ற
மாடியுள்ள வீடொன்றும்
வேண்டும்"

கேள்வி: இவை இரண்டு விருப்பங்களில்...

பதில்: ஒன்றுதான் நிறைவேறியுள்ளது. இரண்டாவது கிடைக்குமா? என எதிர் பார்க்கிறேன்.

கேள்வி: உங்களுக்கு விருப்பமான பண்புகள்...

பதில்: எப்போதும் மகிழ்ச்சி, சிரித்த பேச்சு இன்னும் **எளிமையும் பெருமிதமும்...**

கேள்வி: தாங்கள் விரும்பும் இலக்கியத்துறைகள் யாவை?

பதில்: சிறப்பாகக் 'கவிதை' பொதுவாக நாடகம்.

கேள்வி: இந்தக் காலத்தில் தமிழைத்தாழ்த்திறுற்போலப்பேசிவிட்டால் சில பத்திரிகைகளில் அதிக விளம்பரம் கொடுக்கிறார்கள், தமிழில் எல்லாம் சமஸ்கிருதத்தில் இருந்துவந்தவைதான் என்று ஆராய்ச்சி செய்து எழுதினால் தண்டச்சோறு போட்டுப் பல்கலைக் கழகங்கள் அவர்களை வளர்க்கின்றன. 'தமிழா? அது ஒரு மொழியா? எனப் பேசித் திரிந்தால் 'டாக்டர் பட்டம்கூட உங்களுக்கு வழங்கப்படலாம். இத்தகைய ஒரு நிலைமை வரும்போது என்ன செய்வீர்கள்?

பதில்: வானுலகம் என்று ஒன்று இருந்து கிடைத்தாலும் இந்த இழிசெயல் புரியமாட்டேன்.

கேள்வி: தமிழ்நாட்டு மக்களிடம் எதை எதிர்பார்க்கிறீர்கள்?

பதில்: மனிதப் பண்பை; என்னுடைய கவிதைகளைப் படித்து உணரவேண்டும் என்பதைத்தான் தமிழர்களிடம் எதிர்பார்க்கிறேன்.

கேள்வி: தங்கட்குப் பிடிக்காதவை.

பதில்: கடுகடுப்பான முகம், சாதி. பிறமொழி ஆதிக்கம்.

கேள்வி: தாங்கள்வெறுப்பது?

பதில்: பிழையோடுவெளிவரும் கவிதைகளை

வாணிதாசன், முடியரசன் இருவரும் பத்திரிகை உலகில் புதுமை வழி வகுத்த பொன்னியின் இதழ்களிலே முதன் முதல் தோன்றினார்கள். "பாரதிதாசன் பரம்பரையில்! அதுமட்டுமல்ல, பாரதிதாசனே அவர்களிருவருக்கும் பரிசளித்துச் சிறப்பித்தார். அவர் தலைமையில் நடைபெற்ற கோவை முத்தமிழ் மாநாட்டில் நாம் பெற்ற இலக்கியச் செல்வங்களாக அவர்களின்று விளங்கி வருகிறார்கள்.

முடியரசன், பாரதிதாசனை வழிகாட்டியாகக் கொண்டுள்ள முற்போக்குக் கவிஞர். ஆம், வழிகாட்டியாகக் கொண்டுள்ளவர் என்று சொன்னேன். அவரைப் பார்த்தெழுதுகிறவர் அல்லர்; அவர் தம் வரிகளைத் தேடி எடுத்துச் செருகிக் கொள்பவர் அல்லர்; முன்னோர் வழிநின்று தனிப்போக்கில் தனிப்பாங்கில் தமிழ் மரபுக்குக் கட்டுப்பட்டுக் கவிதை எழுதவேண்டுமென்பதே அவர் கொள்கை. வாணிதாசன் கவிதைகளிலே ஒரு தனிப் போக்கையும் முடியரசன் கவிதைகளிலே மற்றொரு பாங்கையும் காண்கிறோம். இருவரும் பாரதிதாசனின் வழிவந்தவர்களே ஆயினும், இலக்கியத்தின் வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறார்கள். வாணிதாசன் இயற்கையை அனுபவித்து அதனுடன் இணைந்து நின்று பாடுகிறார், அதனால் அவரை "எழிற் கவிஞர்" எனலாம். 'தமிழ் நாட்டுத் தாகூர் என மயிலை. சிவ. முத்து அவர்கள் 'வாணியை அழைத்திருப்பதை ஓர்க. முடியரசனோ கருத்துக் கருவூலமாகக் காட்சி தருகிறார். இயற்கையினைப் பாடும்போதும் அவருக்கு மொழியுணர்ச்சியும், புதுமைக் கருத்துக்களுமே மேலோங்கி நிற்கின்றன, அதனால், இவரைப் 'புதுமைக் கவிஞர்' எனலாம்.

முடியரசன் விரைவாகவும், எளிதாகவும் பாடுகிறார். காரில் செல்லுகையிலும், கால் நடந்து உலாவுகையிலும், பந்தாடும்போதும், பலருடன் 'அரட்டையடித் திருக்கும் போதும்கூட அவரால் பாடமுடிகிறது. ஆனால் ஒன்று, அவர் மனநிலை சரியாக இருக்கவேண்டும். பெரும்பாலும் அடித்தல் திருத்தல் இன்றிப் பாடுவார், பாடிய பின் அங்கொன்று இங்கொன்றுச் சொற்களை மட்டுமே மாற்ற முனைவர், நண்பர்களிடம் பாடிக்காட்டித் திருப்தி தருகிறதா என ஆய்வார். சிலர் கவிதை பாடும்போது 'பிரசவ வேதனைப் படுவதுண்டு. முடியரசனுக்கோ எண்சீர் வெண்பா, அகவல்—முதலிய பாவகைகள் பாடுங்கால் வேதனைப் பட்டதாகவே அறிந்ததில்லை. ஒரு பாடல் விறுவிறுப்புஏறும், கருத்து மிகும், சொற்கள் வளம் பெறும், அவர் முகமும் மலரும், உள்ளம் உவகையூற்றின் உச்சியிலே களித்துக்கிடக்கும். இதைப் பார்த்த பிறகுதான் அவரை உண்மையிலேயே கவிஞரெனக் கூற என் மனம் ஒப்பியது. அவர் மேடை ஏறித் தோற்றது கிடையாது, எடுத்ததற்கெல்லாம் அவர்கவியரங்கேறிக் கவிதைகளுக்கு 'இழிவு' தந்ததும் கிடையாது. யாருக்குமே அவர் திருமண வாழ்த்துப் பாடிக் கொடுப்பதில்லை, ஓசியில்—ஆனால் அவர் விரும்பிய ஒருவரையே மணவிழாவில் வாழ்த்தி இருக்கிறார்!

முடியரசன் கவிதைகளைப் பற்றிச் சுருக்கமாகச்சொல்லவேண்டுமென்றால்: கருத்துப் பொலிவு, சுவை மலிவு, எளிய சொற்கள், இனிய ஓட்டம், தமிழ் வளம், சொற் பொருள் நயம் இவை கலந்த மொழியுணர்ச்சியைத் தம் அடிப் படையாகக் கொண்டு வாழ்க்கை யுடன் ஒட்டி உறவாடும் அனுபவங் களின் படப்பிடிப்புகளாக, அவல சுவையிலே பிறந்து ஆத்திரத்தை மூட்டுவனவாக, சிரிக்க வைத்து இடித்துக் கூறுவனவாக அவைகள் விளங்குகின்றன.

முடியரசன் பிறந்த ஊர் பெரிய குளம்; வளர்ந்தது. மேலைச்சிவ புரி; வாழ்கிறது காரைக்குடி 7-15-1920-இல் சுப்பராயலு, சீத லட்சுமி என்ற பெற்றோரைப் பெற் றுப் பிறந்தார். நம் முடியரசன் புதுக்கோட்டையைச்சேர்ந்த மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபைத் தமிழ் கல்லூரியில் படித்து 'வித்வான் பட்டம் பெற்றார். சென்னையில் ஈராண்டுகள் தமிழாசிரியராக பணியாற்றினார், முத்தியாலு பேட்டை உயர்நிலைப் பள்ளியில் அதற்குமுன் குழிபிறையில் புது கோட்டைக்கு அண்மையிலே உள் ஊர்-தமிழாசிரியர் வேலை பார் திருக்கிறார். இப்போது காரைக் குடி, மீ. சு. உயர்நிலைப்பள்ளியி தமிழாசிரியராகப் பணி ஆற்றி வரு கிறார்.

இடையே ஒரு நிகழ்ச்சி-முடியரசன் வாழ்வையே மாற்றி இருக்கக் கூடிய நிகழ்ச்சி - நடைபெற்றது. அதைக் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டும். முடியரசனிடம் இரண்டு பண்புகளை நான் கண்டேன். ஒன்று அவரைக் கவிஞராக. மற்ற ஒன்று நடிகராக. என்னைக் கேட்டால நடிகர்க்கு வேண்டும் பண்பு முற்றும் அமைந்தவர் முடியரசன் என்று கூறுவேன். கல்லூரியில் படித்த போது அவர் நாடகங்களில் நடித்திருக்கிறார். இனிமையாய்ப் பாடவும் தெரியும். ஆயினும் அவர் ஏனோ பண்ணோடு மேடைகளிற் பாடுவதில்லை? அவர் 'வித்வான்' வகுப்புப் படித்ததும் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டார். மனமுடைந்துநேராகக் கொல்லத்திற்குச் சென்று நவாப். டி. எஸ். இராஜமாணிக்கம் கம்பெனியில் சேர்ந்தார். நல்ல வேளையாக, இராஜமாணிக்கம் கம்பெனியார் உணவு அவர் வயிற்றுக்கு ஒத்துக்கொள்ள வில்லை. மீண்டும் தமிழாசிரியராக வரநேரிட்டது. அது அவரைக் கவிஞராக்கும் திருப்புவழி ஆயிற்று.

முடியரசருக்குக் குடும்பப் பற்றுக் குறைவு என்று சிலர் எண்ணுகின்றனர். அவரைவிடக் குடும்பப்பற்று மிக்கவர் இல்லை என்பது என் துணிபு. ஆனால் குடும்ப நிலைமையால், அவர் மனமுடைந்து வாழ்கிறார். அவரை வறுமையிலும். துன்பங்களிலும் சருக்கிவிடாமல் காப்பது தமிழ் - ஆம், தமிழே யாகும்!

“கலைச்செல்வி' என்ற அவர் மனைவியார் அவர்தம் கருத்துக்கு இசைந்தவர். புதுக்கோட்டையில் மணமகள் இல்லத்தில், தமிழாசிரியர் கழகத் தலைவர் “தாத்தா” மயிலை. சிவ. முத்து அவர்கள் தலைமையில் இவர்களின் கலப்புச் சீர்திருத்தத் திருமணம் சிறப்புற நடைபெற்றது. அவர்கள் வாழ்வின் பயனாகப் பாரியும், குமுதச் செல்வியும் வளர்கிறார்கள். இலக்கிய வாழ்வில் அவர் பெற்ற முதற் குழந்தை 'முடியரசன்கவிதைகள்'. அண்மையிலே வெளிவந்த அந்நூல் பலரின் பாராட்டுகளைப்பெற்று வருகிறது. இப்போது முடியரசன் எழுதி வருபவை:—1. வீரகாவியம் 2. முடியரசன் இசைப்பாடல்கள் 3. பூம்பொழில் 4. தேன்மொழி முதலியன.

இலக்கிய உலகில் இருள் பரவியிருந்த வேளையில் இலகு ஒளிவிரிக்கும் விடிவெள்ளியெனப் பைந்தமிழ், பாரதியைத் தந்தது. பாரதி இளங்கதிர் விரித்தெழும் ஞாயிறு என ஒரு பாரதிதாசனைத் தந்தார். பாரதிதாசனே ஒரு பரம்பரையைத் தந்திருக்கிறார், பாரெங்கும் ஊடுருவும் ஒளிக்கதிர்களென. தமிழ் இலக்கிய உலகம் வீறுபெற்று எழுகிறது. ஆம், இருபதாம் நூற்றாண்டின் தமிழ் மறுமலர்ச்சி இலக்கிய வரலாறு இது.

பாரதி பிறந்த காலம் அடிமைக் காலம். அதனால் அவர் பாடல்களிலே நாட்டுணர்ச்சி கொழுந்து விட்டெழுந்தது. பாரதிதாசன் வளர்ந்த காலம் விழிப்புக் காலம். அதனால்தான் அவர் பாடல்களிலே புரட்சித் தீ பொங்கி யெழுந்தது. இக்காலமோ வாழ்வுக் காலம் - வாழ்வுக்காகப் போராடும் காலம். அதனால்தான் தீமையை அரித்து அழித்துவிட்டு, நன்மையை ஆக்கி வளர்க்கும் செயலூற்றாய் விளங்கும் கவிஞர்களை நாம் எதிர் பார்க்கிறோம்.

உறங்கிக் கிடந்தவர்களைத் தட்டி எழுப்பினார் பாரதி. உரத்த குரலிலே அவர்களைக் கூவி அழைத்து உண்மை நிலை காட்டினார் பாரதிதாசன். நன்மைக்கு வரவேற்பும், தீமைக்கு வழியனுப்பும் பாடும் 'பரம்பரைக்' கவிஞர்களை இன்று நாம் காண்கிறோம்.

பாரதி நிலத்தைப் பண்படுத்தினார். பாரதிதாசன் பருவமறிந்து புதுமை வித்திட்டார். இன்று அது பூக்கிறது, காய்க்கிறது, தமிழகம் பூந்தோட்டமாக மாந்தோப்பாக மாறி வருகிறது.

பாரதி ஊற்று ஆனார். பாரதிதாசன் உயிர் ஆறு ஆனார். அவர் தம் பரம்பரையோ தமிழ்மொழியைத் 'துறைதோறும் துறை தோறும்' விளைப்பதற்குப் பாய்ந்து வரும் கிளைநதிகள் ஆனார். அவற்றிலே ஒன்றாய்—மொழிவளர்க்கும் துறை விளக்கித் தமிழிலக்கியப் பாவலராய்த் தழைத்தோங்கும் 'கவிஞர் முடியரசனை' தமிழ் மக்களின் சார்பாக வாழ்த்திப் பல்லாண்டு, கூறுகிறேன். தமிழ் உண்மையிலேயே நன்றாக வாழ வேண்டுமென்ற கருத்தினைக் கொண்டவனாதலால்!

—தமிழண்ணல்

இதோ தலைசிறந்த படங்கள்!

திருச்சி தஞ்சாவூருக்கு நாங்கள் விநியோகிக்கிறோம்

மதராஸ் பிக்சர்ஸ்:

சேந்தாமரை

கஸ்தூரி பிலிம்ஸ்:

மேனகா

பத்மினி பிக்சர்ஸ்:

முதல் தேதி

மற்றும்

கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, சொர்க்கவாசல், நால்வர், பணம், ஆசைமகன், மாங்கல்யம், அம்மையப்பன்.

மற்றும் பல படங்கள்!

ராணி பிக்சர்ஸ்

திருச்சி.

இலக்கியத்தில்

புலம்பல்!

சேரமான் குடக்கோ நெடுஞ்சேரலாதனுக்கும், சோழன் பெருவிறற் கிள்ளிக்கும் போர் மூள்கிறது. ஒன்றுபட்டு வாழ்ந்தவர்கள், ஒருவரையொருவர், தாக்கிக் கொள்கின்றனர்.

கடும்போர்! தமிழகத்துத் தீரர்களின் உள்ளத்திலே கொண்ட பொறாமையால், எங்கு பார்த்தாலும் களிறுகளின் இடி முழக்கம்! மனிதப்பண்பை மறந்து - அன்பை மறந்து மறத்தமிழரசர்க்கிடையே பெரும்போர்! பொறாமை எண்ணத்தால் வீரவாள் இரண்டு 'கலகல' வென ஒலிக்கும் சத்தம்! ஒன்றுபட்ட அன்பிலே விஷமம் கலந்தது. எப்பக்கம் பார்த்தாலும் ஒரே பேரொலி! களத்தைச் சுற்றிலும் இரத்த வெள்ளம்! கூடி வாழ்ந்த அவர்களிடையே விரோதம் விளையாடியதால், வெறியாட்டம் நடனமாடின. இரு திறத்தாரிடையே கனல் கக்கும் சீற்றம்! கண்ணீரும் செந்நீரும் கலந்த இரத்த ஓட்டம்! ஓய்வெடுத்துக் கொண்டிருந்த உரைவாட்கள், யாரைத்தாக்குவதென்றறியாமல் தாக்கிக் கொண்டன.

அன்பு; அறப்போராகியது. தமிழர் என்பதை மறந்து, எதையோ ஒன்றை எண்ணிக்கொண்டு இரு சேனைகளும் தவிடுபொடியாகின. அன்பையும் பண்பையும் வளர்த்த மன்னர்கள், விரோதத்தை வளர்த்து வீழ்ந்தனர். நட்போடு கூடிக்குலவிய கொற்றவர்கள், கொடுவாளினைக் கையிலேந்தி, தன்னை மறந்து, சேனைகளை வெட்டி வீழ்த்துகின்றனர். கடைசியில் அவ்விருவரே கீழே வீழ்கின்றனர்.

பரந்த மார்பும், உறுதிபடைத்த தோள்களும் மாற்றானைப் பணிய வைக்கும் திறமை கொண்ட மாவீரர்களின் மார்பிலே, பொறாமையிலெழுந்த வாள் பாய்ந்து, இருவரும் துடி துடித்தபடி கீழே விழுகின்றனர். களத்திலே விழுந்த எண்ணற்ற முண்டங்கள், முகாரி கீதத்தை முழக்கிக் கொண்டிருந்தன. வெற்றி முரசம் கொட்ட வேண்டியவர்கள், அழுகைக் குரலை எழுப்பினர். எஞ்சியவர்கள் புண்பட்ட புரவலர்கள் குற்றுயிராய்க் கிடக்கும் செய்தியை நாடு முழுமையும் பரவச் செய்தனர்.

வேற்று நாட்டுக்குச் சென்றிருந்த கழாத்தலையார் என்னும் புலவர், இச்செய்தியைக் கேள்வியுற்று, 'ஓ' வென ஓலமிட்டவாறு களத்தை நோக்கி ஓடோடி வருகிறார். சோழன் தன்னை மறந்து உறங்குவதைக் கண்டுவிட்டு, சேரனைக் காண்கிறார்.

“மன்னா! என் மாசற்ற மணி விளக்கே! மங்காத புகழொளியே! உங்களை இந்நிலையிலா காணவேண்டும்? ஒன்றுபட்டு வாழவேண்டிய நீங்கள், தீமையான எண்ணத்திற்கு ஆளாகி, இறுதியில் இம்முடிவையா அடைய வேண்டும்?

வந்தவரையெல்லாம்வரவேற்று, இடையறாது வாரி இறைக்கும் வள்ளல் பெருமானே! காணமுடியவில்லையே, இந்தக் காட்சியை! கேட்க முடியவில்லையே, இங்கு அழும் பரிதாபக் குரலை! நினைக்க முடியவில்லையே, மக்களின் மனக் கொதிப்பை! என்று புலம்புகிறார்.

நெடுஞ்சேரலாதனோ, தன் தவறை உணர்ந்தவாறு, தான் அணிந்துள்ள ஆரத்தைக்கொண்டு போகும்படி குறிப்பால் உணர்த்துகிறான்; அவனது கண்களிலிருந்து கண்ணீர் வழிகிறது.

அக் குறிப்பைக் கண்ணுற்ற புலவர், தன்னை மறந்து மன்னனின் வள்ளல் தன்மையைக் கண்டு மனம் கலங்கி மேலும் தன் புலம்பலைத் தொடங்குகிறார்.

'பைந்தமிழ்ப் பாவலா! நீங்கள் இருவரும் மாய்ந்து விடும் நிலையில் உள்ளபோது யான் எதைப் பெற்றுச் செல்வேன்? வெற்றி பெற்ற கோமகன்; தோல்வியடைந்த மன்னனின் களிறுகளையும், குதிரைகளையும், ஏனைய பொருளையும் கொடுக்கும் வழக்கம்தான்! ஆனால் இன்று யான் எவரிடத்தில் பெற்றுச் செல்வேன்? கொடுக்கும் வள்ளல் குற்றுயிராய்க் கிடக்கும்போது கொடை வளம் ஏது?

செந்தமிழ்க் காவலா? இறந்து வருவோர் எதைப் பெற்றுச் செல்வார்கள்? யானையைப் பெற்றுச் செல்வோமென்று, எண்ணினால், மழை முகிலைத் தடுக்கும் குன்றுகளைப்போலல்லவா, களிறுகள் அம்புபட்டுக்கீழே கிடக்கின்றன. அழகுத் தேரைப் பெற்றுச் செல்ல வேண்டுமென்று வந்தால்; அச்சாணி முறிந்து, நின் பரந்த மார்பு தரையின்கண் சாய்ந்திருப்பதுபோல் சாய்ந்திருக்கிறது. பிடரி மயிரைக் கொண்ட குதிரையைப் பெறலாமென்று வருவாரானால் உடல் முழுமையும் வாட் புண்கள் பட்டுக் கீழே இறந்து, காற்றற்ற வேளையில் கடலின் மேல் மரக்கலம் நிற்பது போல், குருதி வெள்ளத்தில் நிறைந்து மிதக்கின்றன. இந்நிலையில் இருக்கும்போது, யார் எதைப் பெற்றுக்கொண்டு செல்வார்கள்? வேந்தே! இரப்போர் இரங்கும் வியன் களத்துக் கூத்தர் நின் ஆரம் பெற்றனர்; யான் நின் புகழ்பாடும் பேறு பெற்றேன். அது ஒன்றே போதும்! அரவம் போன்ற ஆரம் எனக்கு வேண்டாம்; இறுதி வேளையிலும் நின்கொடை வளம் புரியும் இன்முகத்தைப் பார்த்ததே போதும்! என்று கழாத்தலையென்னும் புல்வர் புலம்புகிறார்.

(புறம்-368)

இச்செய்யுளில் மன்னர்களின் மாண்பைப் பற்றியும், அதே வேளை தன்னை மறந்து, உணர்ச்சிக்கு அடிமையாகி எதையோ மனதில் எண்ணிக்கொண்டு பகையை வளர்க்கும் முறையும். இடித்துரைப்பது இனிது விளங்கும். இவ்விதச் செய்யுட்கள் சங்க இலக்கியங்களில் பறந்து கிடக்கின்றன.

—[illegible]

சென்ற இதழில்:

நந்தினி, படைவீரன் தளநாயக னின் காதலி; காதலனை வழி யனுப்பிவிட்டு அவன் சென்ற திக் கையே இமை கொட்டாமல் பார்த் துக்கொண் டிருந்தாள். அந்த நேரத்தில் காணுமற் போன அவள் தாயின் நினைவு வந்துவிட்டது. காதலன் செல்லும் அந்த திசை வழியாகத்தான் அவள் அன்னை யைக் கயவர்கள் கொண்டுபோன தாக கேள்விப்பட்டிருந்ததால் நந் தினி திடுக்கிட்டாள். கலங்கியபடியே தலையணையில் முகம் புதைத்தாள்.

இராசேந்திரன் படையின் 'நல் அணி'யின் தளநாயகன். இதன் தாயகம் மேலைச்சளுக்கியம். அதன் மன்னனுயிருந்த தைலவனுக்கு மனைவியர் மூவர். அம்மூவருள் மங்கை ஒருத்தி. அவள் சோழக் குடியைச் சேர்ந்தவள். மங்கை மேல் அளவுகடந்த காதல் கொண் டிருப்பதாகஎண்ணியபட்டத்துராணி —மங்கையையும் அவள் குழந்தை யையும் காட்டில் விட்டு விட்டாள். இச்சூதை அறிந்த தைலபன் ஏக் கத்தால் மாண்டுபோனுன். காட் டில் அனுதைகளாக இருந்த மங்கையையும் குழந்தையையும்புல வர் வாழியாதன் என்பார் காப்பாற் றினர். அந்தக்குழந்தைதான் தள நாயகன். சோழநாடு வந்தபின் மங்கை மாண்டாள். அப்பொழுது தளநாயகனுக்கு வயது இருபது.

தளநாயகன் இராசராசன் படை யில் சேர்ந்து இளவரசன் இராசேந் திரனின் நண்பனுனுன். இரா சேந்திரன் அரியணை ஏறியதும் தள நாயகன்'அணித்தலைவன் ஆனுன். வடபெண்ணை அருகில் இராசேந் திரன் படைகள் ஒய்வு கொண்டன. கூடாரத்தில் சாய்ந்தபடி சிந்தனை யில் ஆழ்ந்தான். அவன் நினை வெல்லாம் நந்தினியிடமே இருந் தது. அங்கு நடைபெற்ற ஆடல் பாடல்களில் நாட்டம் கொள்ள வில்லை. மாருக வெறுப்புணர்ச்சி வரவே மெல்ல எழுந்து நடந்தான். கருக்கிருட்டு. தாயை இழந்த நந்தினியைப் பற்றி எண்ணிய படியே நின்ருன். திடீரென அவன் தோளில் ஒரு கை விழுந் தது. அவன் நண்பன் இராசேந் திரன் நின்ருன். நந்தினியிடம் தன் காதல் பற்றியும், காணுமல் போன தன் தாயைப் பற்றி செய்தி அறியுமுன் மணம் செய்ய நந்தினி மறுக்கும் செய்தி பற்றியும் பேசிக் கொண்டிருந்தான்.

இராசராசனின் எதிரிகள் நந் தினியின் தாயாகிய கயல்விழி யைத் தூக்கிப் போனதாக நம் பினரே தவிர, எந்த இடத்திற்கு கொண்டு போனுர்கள் என்று திட்ட மாகத் தெரியவில்லை. வெங்கிநாட் டில் கண்டதாகவும், பெண்ணையாற் றங் கரையில் கண்டதாகவும் சிலர் கூறினர். நாட்டில் இந்த சம்பவம் பழைய கதையாகி விட்டது.

கயல்விழி—நந்தினியின் தாய்— கணக்காயன் ஒருவன் மனைவி. கயல்விழி மறைவுக்குப்பின் கணக் காயன் நந்தினியை வளர்த்து வந் தான். மனநோய் காரணமாக கணக்காயன் உடல்நோய் கண்டு படுக்கையாய்க் கிடந்தான்.

"நான் கவனிக்கிறேன். கவலைப் படாதே" என்று இராசேந்திரன் தளநாயகனுக்கு ஆறுதல் கூறி ஞன்.

இருவரையும்திடீரென தெரிந்த ஒரு வெளிச்சம் கலர்ந்தது. ஆறு விளக்குகள் வரிசையாகத் தெரிந் றின. இருவரும் எழுந்தனர். வாளில் கை வைத்தபடியே வெளிச்சத்தை நோக்கி நடந்தனர்.

சிறுவீடு, அங்கே பெண்கள் வாட் பயிற்சி செய்துகொண்டிருப்பதைக் கண்டனர். கூர்ந்து கவனித்தான் ராசேந்திரன். சிறு ஓசை கேட்டு 'யாரது' என்றனர் உள்ளிருந்த பெண்கள். இருவரும் வாளை உரு வினர். திடீரென அவர்களைச்சுற்றி இருபது பந்தங்கள் எரிய ஆரம் பித்தன. நாற்பது வீரர்கள் நின் றனர் சுற்றிலும்.இடையில், கழுத் தில் கருநாகம் வளைய—பாதி யாடையுடன் நின்றுகொண்டிருந் தாள் ஒரு மங்கை—

இராசேந்திரனுக்கும் தளநாயக னுக்கும் திகைப்பு மிகுந்தது. யார் இவர்கள்? இதுவரை எங்கிருந்தார் கள்? எப்படித் திடீரென்று வந் தார்கள்?—அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அவர்களை வெகுநேரம் சிந்திக்க வைக்காமல் ஒரு வீரன் அருகில் நெருங்கினுன்.

"யார் நீங்கள்?" அவனது குரல் கம்பீரமாக ஒலித்தது.

தளநாயகன் போருக்குத் தயா ராவதுபோல், வாளைச் சுழற்ற முயன்ருன். நறுக்கென்று அவன் கையை இராசேந்திரனின் இடது கை பிடித்தது. 'அஞ்சுவதஞ் சாமை பேதமை' என்பது போல் இருந்தது அது. இவரும் வாளை உறையில் இட்டனர். அந்த வீரனின் கை, மரம் விழுவதுபோல் இராசேந் திரனின் தோளில் விழுந்தது. தளநாயகனுக்குப் பொறுக்கமுடி யவில்லை; கண்களால் அனுமதி கேட்டான். ஆனுல் இராசேந்திரன் அமைதியாகப் புன்னகைத்தான்.

"மரியாதையாகப் பதில் சொல் லுங்கள்! யார் நீங்கள்?"

இராசேந்திரன் அமைதியாகப் பேசினுன், "நாங்கள் சோழ மண் டல வீரர்கள்."

"இங்கு எங்கு வந்தீர்கள்?"

இருவரும் மௌனமாக இருந் தனர். உண்மையைச் சொல்ல லாமா? இவர்கள் யாரோ? ஒரு வேளை இடைதுறை நாட்டிற்குச் சம் பந்தப்பட்டவர்களா யிருந்தால்? இவர்களது மௌனங் கண்ட வீரன் கருநாகமங்கையைத் திரும்பிப் பார்த்தான், அவள் பேசாமல் கண் களை அசைத்துவிட்டு திரும்பி நடந் தான். இராசேந்திரனும் தளநாய கனும் வீரர்கள் சூழ்ந்துவர அவள் பின் போயினர். இந்தச் சந்தடியில் உள்ளே வாட்பயிற்சி செய்துகொண் டிருந்த பெண்களும், வெளியே நின்று கவனித்தனர். அவர்களும் இவர்களுக்குப் பின்னுல் நடந் தனர்.

சிறிய மரங்களை வளைத்து விநோ தமாகச் செய்யப்பட்ட ஆசனம் ஒன் றில் ஒரு வேல் சொருகி இருந்தது. பக்கத்தில் இடப்புறம் ஆறும் வலப் புறம் ஆறுமாகப் பன்னிரண்டு ஆச னங்கள் போடப்பட்டிருந்தன. வேல் சொருகிய ஆசனத்தின் முன் பகுதியில் அந்த மங்கை போய் உட் கார்ந்தாள். மற்ற ஆசனங்களில் வீரர்கள் சிலர் அமர்ந்தனர். நேர் எதிரே இராசேந்திரனும் தளநாய கனும் நிறுத்தி வைக்கப்பட்டனர்.

அந்த 'இராஜாங்க'த்தின் தோற் றம், இராசேந்திரனுக்கு வேடிக்கை யாகத் தெரிந்தது. சுற்றிச் சுற்றி பார்வையைச் செலுத்திய வண்ணம் இருந்தான். தான் ஆபத்தான சூழ்நிலையில் இருப்பதே, அவ னுக்கு மறந்து போய்விட்டது. தள நாயகனே, "இவர்கள் என்ன செய்யக்கூடும்? என்ன கேட்கக் கூடும்?" என்ற யோசனையில் ஆழ்ந் திருந்தான்.

அந்த மங்கை, வெகு நேரமாகத் திறக்காத வாயை இப்பொழுது திறந்தாள்: "நீங்கள் யார்? எங்கு வந்தீர்கள்? இந்த நேரத்தில் இங்கு வரவேண்டிய அவசியம் என்ன என்பதையெல்லாம் மரியாதை யாகச் சொல்லிவிடுங்கள்."

தளநாயகன் பதில்கூற வாயெடுத் தான். இராசேந்திரன் அவனை அடக்கிவிட்டு, தான் சொல்ல ஆரம் பித்தான்.

"நீங்கள் யார் என்பதைத்தெரிந்து கொள்ளாமலே உண்மையைக் கூறி விடுவது விவேகமில்லைதான். ஆனுலும் உண்மையைக் கூறு கிறேன். நான் சோழ நாட்டு மன் னன், இராசேந்திரன். இவன் என் தோழன் - அணித்தலைவன்- தளநாயகன் இடைதுறை நாட்டின் மீது போர் துவக்கியுள்ளோம். போகும் வழியில், பக்கத்துக் காட் டில் ஒய்வு கொண்டோம். சுற்றிப் பார்க்க இருவரும் வந்தோம். வந்த வழியில் இந்த வேதனை!

இராசேந்திரன் வாய்மூடுவதற் குள், அந்த மங்கை படபடப்பாக, "நீங்கள் சொல்வதை நம்ப லாமா?" என்ருள்.

"நம்பலாம்-தாராளமாக!" என் ருன் இரராசேந்திரன்.

அவள் எழுந்து அவர்களருகில் வந்தாள். இருவரது வாட்களையும் கையில் எடுத்து, பக்கத்தில் நின்ற வீரனிடம் கொடுத்தாள். அவர் களைப் பின்னுல் வருமாறு சைகை காட்டிவிட்டு, தான் அமர்ந்திருந்த 'சிம்மாசன'த்தை மேலே தூக்கி னுள். கீழே ஒரு படிக்கட்டுத் தெரிந் தது. கையில் ஒரு தீப்பந்தத்தை எடுத்துக்கொண்டு உள்ளே இறங் கினுள். இருவரும் அவள் பின்னுல் உள்ளே இறங்கினர்.

அந்தக் 'கீழ்மாளிகை'யின் சூழ் நிலைகளை அவர்கள் காணமுடிய வில்லை. தாங்கள் நின்ற இடம் மட்டுமே கண்ணுக்குத் தெரிந்தது. தீப்பந்தத்தை, ஒரு தூணில் சொருகி விட்டு, மெல்ல அந்த மங்கை, தன் கழுத்தில் இருந்த நாகத்தைக் கீழே இறக்கி விட்டாள். அது ஓடிப்போய் ஒரு மூலையில் சுருண்டு கொண்டது. திரும்பி இராசேந்திரன் அருகில் வந்து, அவ னது மேலாடையை, தன் கைகளால் எடுத்தாள். இராசேந்திரன் தடுத்து தானே கழற்றினுன். அவ அவனைத்திருப்பி, முதுகைப் பார்த் தாள். பார்த்ததுதான் தாமதம் தடாறென அவன் கால்களில் விழு

தாள் ; வணங்கினுள் ; எழுந்தாள். படிகளில் வெகு வேகமாக ஓடினுள்; மேற்கதவைத் தடாறெனத் திறந்தாள். சமநிலத்திற்குத் தாவினுள். "சோழமண்டலம் வாழ்க ! சோழ மன்னர் நீடூழி வாழ்க !" என்று கூவினுள். கூட்டமும் சேர்ந்து கோஷித்தது !

'கீழ் மாளிகை'யில் நின்ற இருவருக்கும், எல்லாம் குழப்பமாக இருந்தது. இருவரும், படிகளில் ஏறி மேல் நிலத்திற்கு வந்தனர். அவர்களது பாதங்களில் மலர்கள் தூவப்பட்டன ! "வாழ்க !" என்னும் வார்த்தை பலமாக ஒலித்தபடி இருந்தது. திடீரென்று ஒரு பெண் ஓடிவந்து இராசேந்திரன் கழுத்தில் ஒரு மாலையைப் போட்டுவிட்டு விம்மி விம்மி அழுதாள் ! கோஷங்கள் அடங்கின ; மரண அமைதி குடிகொண்டது. மாலை போட்ட மங்கை, அழுதபடி, தலை குனிந்தாள். இரண்டு துளி கண்ணீர் சூடாக விழுந்தது. அவள் குனிந்து அவனது பாதங்களைத் தொட்டு வணங்கினுள்.

அமைதியைக் கிழித்துக் கொண்டு கூட்டத்தின் கோஷம் மீண்டும் எழுந்தது.

"அன்னை வாழ்க !...வாழ்க !"

"மன்னவர் வாழ்க !...வாழ்க ! வாழ்க !"

—இராசேந்திரன் பாதத்தில் மண்டியிட்டபடி வணங்கியிருந்த அந்த மங்கைக்குப் பதினறு வயதிருக்கும். அவளது முகம் தளநாயகனுக்கு எங்கேயோ பார்த்ததுபோல் இருந்தது. "இது ஏதோ ஒரு பிரமை ; நாம் எங்கே பார்த்திருக்கப் போகிறோம் !" என்று தன்னைத் தானே தேற்றிக் கொண்டான்.

கருநாக மங்கை, இராசேந்திரனுக்கு நேர் எதிரே பயபக்தியோடு வந்து நின்று கைகளை முன்புறம் கட்டியவாறு பேச ஆரம்பித்தாள் ;

"சோழகுல திலகம் வாழ்வதாக சோழ மண்டலம் நீடு நின்று நிலைப்பதாக ! மதிப்பிற்குரிய மன்னவரே உங்கள் வரவுக்கு **ஆலங்காடு** நன்றி தெரிவித்துக் கொள்கிறது. புலிக் கொடி தழைப்பதற்கு ஆலங்காடு எந்த நேரத்திலும் தன்னை அர்ப்பணிக்கத் தயாராயிருக்கிறது.

ஆயினும்...? நாடு புரக்கும் நல்லோய் ! ஆலங்காட்டுக்கு ஒரு விசேஷக் கடமை இருக்கிறது ! ஆம் ! அது, தனியாகச் செய்யவேண்டிய பணி ஒன்றுள்ளது ! யாருடைய துணையும் இல்லாமல், தானே சாதிக்கவேண்டிய அரும்பணி அது ! அது முடிந்த பிறகு.........சோழன் தலைநகரில் குடியேற ஆலங்காட்டு மக்கள் ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள். வேந்தே "நாங்கள் யார்? எங்கள் பூர்வீகம் என்ன? எங்களுக்குள்ள விசேடக் கடமை என்ன ?" என்பதுபற்றி யெல்லாம் எங்களை வினவ வேண்டாம். காலம் வரும் ; அன்று யாவும் புரியும் !" என்று கூறிவிட்டு நாலடி பின் வாங்கி, "மன்னவர் வாழ்க ! அன்னை வாழ்க !" என்று கூவினுள். கூட்டம், "வாழ்க ! வாழ்க !" என்று கோஷித்தது.

தளநாயகன் கனவுலகில் நடப்பவன் போல இருந்தான். இராசேந்திரனே, உலகத்து விந்தை யாவும் ஒருங்கே காணப்பட்டவன் போலக் காணப்பட்டான். இந்த நேரத்தில் எட்டுபேர், இரண்டு பாடைகளைத் தூக்கிக் கொண்டு முன்னே செல்ல, பின்னல் இரண்டு பெண்கள், துணியால் வாயைமூடிக் கொண்டு வந்துகொண்டிருந்தார்கள். தளநாயகன், ஆச்சரியமாக, "அது என்ன !" என்று கேட்டான். கருநாகமங்கை சிறிதும் படபடப்பின்றி "இரண்டு பிணங்கள் !" என்ருள்.

"பிணங்களா ! எப்படிச் செத்தார்கள் ? யார் அவர்கள் ?"

"காலம் வரும் ! அப்போது புரியும் !" என்ருள், அந்த மங்கை.

அந்த இரண்டு பாடைகளும், கீழ் மாளிகைக்குள் கொண்டுசெல்லப் பட்டன- பாடையின் பின்வந்த பெண்கள் இருவரும், கீழே மண்டியிட்டு, "அன்னை வாழ்க !" என்று கூறிவிட்டுக் கீழ்மாளிகைக்குள் நுழைந்தனர்.

இராசேந்திரன், கருநாக மங்கையிடம், "இந்த மர்மங்களின் காரணங்களை இப்பொழுது சொல்ல முடியாதா ?" என்று கேட்டான். அவனது குரலில், நல்ல கதை ஒன்று கேட்கலாமே என்ற ஆசை தொனித்தது. கருநாக மங்கை முடியாது என்பது போலத் தலையசைத்து விட்டு, "ஆலங்காட்டின் சம்பிரதாயப்படி, சோழ குல திலகத்தின் கண்களையும் கட்டி அனுப்ப வேண்டியவளாயிருக்கிறேன். என் மன்னர் என்னை மன்னிப்பாராக !" என்று கூறிவிட்டு, வீரன் ஒருவனுக்கு சைகை காட்டினுள். அந்த வீரனும், துணி கொண்டு வந்து, வலிக்காதவாறு, இருவரது கண்களையும் கட்டினுன்.

இருவரும், சில வீரர்களால் அழைத்துச் செல்லப்பட்டனர். இராசேந்திரன் குறிப்பிட்டபடி, பெண்ணை ஆற்றங்கரையில், படைகள் தங்கியிருந்த இடத்தருகில் கொண்டுவந்து அவர்களை விட்டுவிட்டு, வீரர்கள் காற்ருய்ப் பறந்தனர். கண்களை அவிழ்த்த இருவரும் மாறி மாறி ஒருவரையொருவர் பார்த்து கண்களைத் துடைத்துக் கொண்டனர். "மர்மம் ! மர்மம் ! ஏதோ மர்மம் !" என்ருன் தளநாயகன். இராசேந்திரன் அதை ஆமோதிப்பவன் போல் சிரித்துவிட்டு "தளநாயகா ! இது பற்றி யாரிடமும் ஏதும் கூறவேண்டாம். போர் முடிந்து திரும்பியதும், வந்து பார்த்து விபரங்களைத் தெரிந்து கொள்வோம் என்ருன். இருவரும் கூடாரங்களுக்கு வந்து சேர்ந்தனர். தளநாயகனைப் பிரிந்து, தன் கூடாரத்திற்கு ஏகினுன் இராசேந்திரன். படைகளும் நடனமாதரும் நிம்மதியாகத் துயின்று கொண்டிருந்தனர். புள்ளினங்களின் ஒலி மட்டும் சுதி கெட்ட வீணையின் ஒலிபோல் கேட்டுக் கொண்டிருந்தது.

பலபலவென்று பொழுது விடிந்ததும், அமைதி அழிந்தது. யானைகளைப் பெயரிட்டு அழைப்பாரும், குதிரைகளைத் தேடுவாரும், ரதங்களை ஆயத்தம் செய்வாருமாக படைவீரர்கள் சத்தமிட்டுக் கொண்டிருந்தனர். வாட்களை உரையில் மாட்டும் ஒலியோடு, நடன மாதரின் சிரிப்பொலி கலந்து கலந்து பரிணமித்தது. அணித்தலைவர்கள், தங்கள் அணிகளைத் தயார் செய்து எண்ணிப்பார்த்துக் கொண்டிருந்தனர். 'நல்லடி அணி'யின் தலைவன் மட்டும் ஒரு மரத்தின் மீது ஏறி, வேறொரு திசையில் கண்ணேட்டம் செலுத்திக் கொண்டிருந்தான். 'காவிரி அணி'த்தலைவன், "தளநாயகா !" என்று அழைத்த சத்தம் கேட்டு, அவனும் இறங்கி வந்தான்.

படைகள் அனைத்தும் புறப்படுவதற்குத் தயாராக நின்றன. ஒரு பெண் பாடினுள் :

"அன்னை காவிரித் திருப்பெயர்
ஆணை !
அறம் வளர்த்திடும் தென்னவன்
ஆணை !
முன்னம் வைத்த கால் அகற்றி
லோம் !
மூழும் போரில் தாதகி சூடுவோம் !"

இப்படிப்பாடி விட்டு "சோழர் பூமி வெல்க !" என்ருள், அந்தப் பெண். படைகள்; "வெல்க !" எனக் கூவி நடைபோட ஆரம்பித்தன. புழுதிப் படலம் எழுந்தது. குளம்படிச் சத்தம் காட்டைக் கலக்கிற்று.

மறுநாள் நடுப் பகலில் இடைதுறை நாட்டு எல்லையை மிதித்தது, சோழ மன்னன் படை. சோழன், இராசேந்திரன், ஒரு வீரனை அழைத்து, போர்ச் செய்தியை இடைதுறை நாட்டானுக்குத் தெரிவிக்கக்கூறினுன். தூதனும் குதிரையில் ஏறிப் பறந்தான்.

★

3

நந்தினிக்கு வந்தது ஓலை !

சினவாகை சூடிச் செருவென்ற வாணன்தென் மாறையில்நம்
மனவாழ் வனையவர் வந்துநல் லியாமம் மணந்ததெல்லாம்
நனவாம் எனவே மகிழ்ந்தே விழித்தொன்றும் நான்கண்டிலேன்
கனவாய் முடிந்தது பின்னை;என் னே !என்ன கைதவமே !

—தஞ்சைவாணன் கோவை

"அடி மரகதம்"

"ஊம்..."

"அவர் வந்தாரடி !"

"யார் ? உன் தாத்தாவா ?"

"போடீ ! பைத்தியக்காரி ! உனக்குக் கிழட்டு மனம் ! நான் சொல்வது....அவரை....!"

புரிகிறது ! புரிகிறது ! அதாவது ...நம் வீட்டுக் கொல்லையில் இருக்கின்ற ஒரு கொடி ! காய் காய்க்கும்! அதற்குப் பெயர் அவரை !"

"ஆகா ! சோழ நாட்டுப் புலவர்கள் உன்னிடம் பிச்சை வாங்க வேண்டும் ! நகைச்சுவை பேசுகிருளாம் நகைச்சுவை ! நகைச்சுவை என்ருல் சிரிப்பு வரவேண்டாமா ! நீ பேசும் நகைச் சுவை பரிதாபமாக இருக்கிறது ! அடி ! நான் சொல்வதைக் கேள். நேற்று இரவு, நான் தூங்கிக் கொண்டிருந்தேன் ; ஒரு இன்பக்கனவு ! என் காதலர் வந்தார். "கண்ணளா ! காதலா !" என்றேன்..."

"உம்......"

"அவர் என் அருகில் வந்து... ...தொட்டார் !"

"தொட்டாரா ! கெட்டது காரியம் !"

" போடீ முகத்தைத் தொட்டார் என்கிறேன்!..."

"சரி பிறகு ?"

"பிறகு...பிறகு...ஹி ஹி ஹி ! "

"என்னடி ஹி ஹி ஹி ! நடந்ததைச் சொல்லேன்."

" எப்படியடி சொல்வேன் !...... அவர்......அவர்..."

"உம்...அவர் ?
பேசாமல் போய் விட்டார் !"

"சீச்சீச்சீ ! பொய் ! பொய்!"

" உண்மையில் அவர் போய் விட்டாரடி ! அடி, மரகதம், போரை முடித்துக்கொண்டு அவர் பத்திரமாக வந்து சேரவேண்டுமடி ! என் மனம் தினமும் அதைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறது !"

"அவர் பத்திரமாக வருவார். நீ ஒன்றும் அலட்டிக்கொள்ளாதே ! ஆமாம். முகத்தைத் தொட்ட பிறகு...என்று இழுத்தாயே ! என்னடி உண்மையைச் சொல் !"

"அதுதான் போய்விட்டார் என்றேனே !"

"நான் நம்ப மாட்டேன் !"

"நம்ப வேண்டாம் ! நீ நம்புவதால் எனக்கென்ன ஆகப் போகிறது !

"ஆமாம்...இவ்வளவு ஆசை வைத்திருக்கிறாயே, அவர் வந்ததும் திருமணத்தை முடித்துக் கொண்டு விடேன் ! "

"என் அன்னை இல்லாமலா ?"

"அன்னை ! அன்னை ! அன்னையா திருமணம் செய்து கொள்ளப் போகிறார்கள் ? அவர்கள் உயிரோடு இருக்கிறார்களோ இல்லையோ !"

"மரகதம் ! அப்படிச் சொல்லாதே ! அம்மா உயிரோடு இருப்பாள் ! ஒருநாள் வருவாள்.

" ஆமாம் ! அதற்குள் நீ கிழவி ஆகிவிடுவாய். எனக்கென்ன ! உன் இளம் பருவம் முழுவதும் கற்பனையிலும் கனவிலுமே தீர்ந்து விடக்கூடாதே என்பதற்காகச் சொன்னேன். சோற்றை எதிரே வைத்துக்கொண்டு சும்மா இருக்க உன்னால் எப்படித்தான் முடிகிறதோ ! சரி ! சரி ! நான் போகிறேன். "

நந்தினியின் வீட்டில் நந்தினிக்கும் மரகதத்திற்கும் இப்படி வாக்குவாதம் நடந்து முடிவில் மரகதம் போய்விட்டாள். நந்தினி காதலனை எண்ணிக் களித்தபடி கண்ணாடி முன்நின்று கண்ணழகு பார்த்தவளாய், தானே தனக்குள் மகிழ்ந்தபடி பாடலானாள்.

எடுப்பு

உங்கள் நினைவில் எந்தன்உயிர்
வாழும்—குளிர்
ஓடைநிகர் மனத்திற் கலை
மேவும் (உங்கள்)

தோடுப்பு :
திங்கள்குடி இருப்போ !
செந்தமிழோ—போர்த்
திறம் கலந்தஉடல் கவிப்
பொருளோ ! கண்ணா(உங்கள்)

முடிப்பு :
எங்கு நிறைந்துநிற்கும் காட்சி
யெலாம்—மனம்
ஏறிக் கலந்திருக்கும் மாட்சி
யெலாம்
தங்கச் சிலைவடிவத் தமிழரசே !
—உங்கள்
தனிஎழில்தா னல்லாமல் இனி
யவை வேறில்லை ! (உங்கள்)

பாடி முடித்த நந்தினி மாங்கிளை முறிந்தது போலப் படுக்கையிற் சாய்ந்தாள்.

கதவு தட்டப்படும் சப்தம் கேட்டது. நந்தினி, ஓடிப்போய்க் கதவைத் திறந்தாள். காதலன்தான் வந்துவிட்டானோ என்ற அவசரம் அவளுக்கு. இளந்தென்றல் வீசும் மாலைநேரம் அந்தக் காரிகையை, காதலனிடம் இரண்டறக் கலக்க வைத்துவிட்டது. ஆனால்...கதவு திறந்ததும் அந்தக் கட்டழகி கல்லாய்ச் சமைந்து போனாள். எதிரே ஒரு இளம்பெண் மேல்மூச்சு வாங்க நின்றுகொண்டிருந்தாள்.

" யார் நீ ?"

" நந்தினி நீதானே ?"

" ஆமாம். நீ யார் ?"

" நான் யாரென்பதைப் பிறகு சொல்கிறேன். உன்னோடு சில விஷயம் பேசவேண்டும்."

" சரி உள்ளே வா !"

இருவரும் உள்ளே வர, நந்தினி கதவைச் சாத்தினாள். உள்ளே வந்த புதுப்பெண் கையில் இருந்த ஓலையை நந்தினியிடம் கொடுத்தாள். அவள் அதைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள். படிக்கப் படிக்க முகம் மலர்ந்தது...! வெளியில் ஏதோ சப்தம் கேட்டது.

" அது என்ன சப்தம்" என்று கேட்டாள் நந்தினி.

"ஹி ஹி...கதவு காற்றில் ஆடுகிறது" என்று மென்று விழுங்கினாள், வந்த பெண்.

கண்ணதாசன்

4

சோழன் படைக்குத் தோல்வியும் உண்டோ !

ஒன்னார் தேய ஓங்கி நடந்து
படியோர்த் தேய்த்து வடிமணி யிரட்டும்
கடா அயானைக் கணநிரை யலற
வியலிரும் பரப்பின் மாநிலங் கடந்து
புலவரேத்த... ... ...

—பதிற்றுப்பத்து

இடைதுறை நாட்டான் சமரின்றிப் பணிவான் என்று எதிர் பார்த்தான் இராசேந்திரன். திரும்பி வந்த தூதன் அந்தச் செய்தி தரவில்லை. இடைதுறையான் சீறிய செய்தி சொன்னான். படைகூட்டும் செய்தியைச் சொன்னான். " தூசுபோல் பறக்கடிப்பேன்" என இடைதுறையான் சூளுரைத்த செய்தியைச் சொன்னான்.

புன்னகைத்தான், பொன்னிவள நாடன் ! " எப்படிச் சிறினான் இடைதுறையான்? எது பலம் அவனுக்கு?

" நன்று ! நன்று ! நடக்கட்டும் முதல் அணி !" எனக் கட்டளையிட்டான் ! இருபத்தொரு அணிகளில் ஒரு அணி நடந்தது. மறு அணி தொடர்ந்தது. பின்னும் பின்னும் கடலெனப் படைகள் ! படை வரும் ஒலி இடைதுறையானுக்குக் கேட்கிறது. "போர் போர் !" என முழங்குகிறான். திட்டம் போட்டுப் படைதிரட்ட நேரமில்லையே என்று திகைக்கிறான். இராசேந்திரனுக்கும் அது தெரிந்தது. திடீரெனத் தாக்குவது போர்முறைகளில் ஒன்றுதான்; ஆயினும் படைதிரட்ட இடைதுறையானுக்கு நேரம் தந்து, துங்கபத்திரா நதிக்கு வடக்கே ஏழாம் கல்லில் அமைவோடு நின்றான். ஆறு நாழிகைக்குப் பிறகு இடைதுறையான் படை, சோழன் படையைக் களத்தில் மோதியது. கடும்போர் மூண்டது- இடைதுறையான் படை திரட்டிய நேரத்தில் பாதி நேரம்கூடப் போர் நடக்கவில்லை. புறமுதுகிட்டது அவன் படை. நகருக்குள் புகுந்தது, சோழன் படை. சோழன் படையில் மாண்டவர் நூற்று அறுபதின்மர். பகைவன் படையில் மாண்டோர் நானூற்று நாற்பதின்மர் ! பாக்கிப் பேர் உயிர் பிழைத்து ஓடினர். அவர்கள் முதுகிலே கவசமில்லை ; ஆயினும் சோழன் வேல் முதுகிலே பாயவில்லை.

படை அரண்மனைக்குள் புகுந்தது. மாதரை, சிசுக்களை மறந்தும் தொடவில்லை. அரண்மனையைக் கைப்பற்றிற்று. இடைமுறை மன்னன் பணிந்தான். வடக்கே கிருஷ்ணா நதிக்கும், தெற்கே துங்கபத்திரைக்கும் இடைபட்ட சமவெளியாம் இடைதுறைநாடு, சோழன் இராசேந்திரன் பாதத்தில் கிடந்தது.

" நானென்ன தவறிழைத்தேன் சோழமன்னா ! என் நாட்டை ஏன் பறித்தாய்?" பரிதாபகரமாகக் கேட்டான் இடைதுறையான்.

"தவறிழைத்தீரென்று படையெடுக்கவில்லை. இராசேந்திரன் வீரத்தின் எல்லையை நிர்ணயிக்கத்தான் வந்தேன். இந்நாடும் அதன் வளமும் எனக்குத் தேவை இல்லை. நண்பரே ! இந்நாட்டை நீரே ஆளலாம். நான் வந்த காரியம் முடிந்தது." உணர்ச்சியோடு பேசினான் இராசேந்திரன்.

இச்சொல் கேட்டதும் இடைதுறை மன்னன் மெய் சிலிர்த்தான். " சோழ மன்னன் வீரம் சொல்லில் அடங்காது. அதுபோல் தூய்மையும் வாய்மையும் அவர்க்கே உரியது !" என்றான் இடைதுறையான். அன்று மாலை தலைநகருக்கு ஐந்தாங் கல்லில் உள்ள இள**மரக்கா**வில் சோழனுக்கும் படைகளுக்கும் பெரியதொரு விருந்து நடைபெற்றது. தளநாயகன், விருந்தில் ஒரு மூலையில் அமர்ந்திருந்தான். அவன் மனம் நந்தினியிடத்தே இருந்தது. விருந்தின் சுவையோ, தோழர்களின் ஆர்ப்பாட்டமோ அவன் கனவைக் கலைக்கவில்லை. நடனம் வல்ல நகை முகமாதர் நடனமாடினர்; அதுவும் அவன் கருத்தைக் கவரவில்லை. அதிலே, இடைதுறை நடனமாது ஒருத்தி அவன் தோளில் கை போட்டதும்தான், அவன் தான் இருந்த இடத்துக்கு வந்தான். அந்த நடனக்காரி அவன் தோளில் கைபோட்டதும், சூழ்ந்திருந்த எல்லோரும் 'ஓ'வென்று சிரித்து கை தட்டினர், விருந்தின் போதபேதம் எது ? இராசேந்திரனும் கைதட்டினான்.

இந்தச் சந்தடியை விரும்பாத தளநாயகன் மெல்ல எழுந்து வெளியேறினான். வெளியிலும் இந்த சப்தம் காதில் மோதவே, சகிக்க முடியாதவனாக, குதிரையில் ஏறி இடைதுறை அரண்மனை நோக்கிப் பறந்தான்.

அவன் இதயத்தில் நந்தினி ஒருத்தி நின்றுகொண்டிருந்தாள். ஆனால்—திடீரென்று அவன் காதுகளில் ஒரு குரல் மோதிற்று. 'அன்னை வாழ்க' என்று கிளம்பிய அந்தக் குரல்—அவன் நினைவைத் திருப்பியது. இடைமுறை நாட்டிலும் ' அன்னை வாழ்க !' என்ன இது ! சுற்றிலும் அவன் கண்களுக்கு யாரும் தெரியவில்லை ! ஆனால்...?

(தொடரும்)

இராசேந்திரன் வழிமுறை

பெருஞ்சோழர் துவக்கம் முதல்



ஏமாற்றம்

இரவு பத்தாகி விட்டது. படம் முடிந்துவிட்டது என் பதைக் காட்ட தியேட்டர் மணி அலறியது. முல்லைச் சிரிப்புடன் ரசிகர்களுக்கு வெண் திரை தன்வணக்கத்தைத்தெரிவித்துக் கொண்டது. பெயருக்கு ஏற்ப 'ஜோதி' டாக்கீசின் தலைப்பிலிருந்த பச்சை நிற பாதரச விளக்கு ஜொலித்துக் கொண்டிருந்தது. ஆண்களும் பெண்களும் சாரை சாரையாக தியேட்டரை விட்டு வெளியேறிக் கொண்டிருந்தனர், ஒரே மக்கள் வெள்ளம். கூட்டம் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வந்து கடைசியில் அங்கொரு வரும் இங்கொரு வருமாக நடந்து கொண்டிருந்தனர்.

பாத்து நடம்மா : சேரும் ... தண்ணியுமா இருக்கு. என்று கூறினர் அந்தக் கிழவர்.

சேலையின் முகப்பை வலக் கரத்தால் உயர்த்திப் பிடித்துக் கொண்டே 'சரி தாத்தா' என்று அந்தக் கிழவருடன் வந்த இளம் பெண் கூறினள்.

அப்பொழுது அந்த வழியே பாதையில் தேங்கி இருக்கும் அழுக்கு நீரைச் சிதறடித்துக் கொண்டு வேகமாக சைக்கிளில் ஒரு இளைஞன் சென்றான்.

'சே ! கண்ணு மண்ணு தெரியாம இப்படி ... அந்தப் பெண்ணிடமிருந்து ஒரு குரல் கிளம்பி சைகிளில் சென்ற அந்த இளைஞனைத் தாக்கிற்று சைக்கிளை நிறுத்தி விட்டு அந்த இளைஞன் இறங்கி வந்தான்.

கிழவருக்கு உள்ளுக்குள் பயமாகத்தான் இருந்தது என்ன நடக்குமோ - பெரிய இடத்துப் பிள்ளையோ என்று தனக்குள் எண்ணிக் கொண்டே "என்ன ராணி நீ பெரிய துடுக்குக் காரியாக இருக்கிறாய்" வம்பு தும்பெல்லாம் நமக் கெதுக்குமா வந்த இடத்தில் ... என்று கிழ்ஸ்த்தாயியில் முணுமுணுத்தார் கிழவர்.

'எந்த இடமானு என்ன தாத்தா - நியாய அநியாயமே இல்லையா' என்று ராணி தாத்தா விடம் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அந்த இளைஞன் நெருங்கி வந்து விட்டான்

'சேலையெல்லாம் சேராகி விட்டது ... தயவு செய்து மன்னித்து விடுங்கள்' என்று வராத சிரிப்பை வலிய இழுத்துக் கொண்டே அந்த இளைஞன் கெஞ்சினன்

'மன்னிக்கும் மனப்பான்மை எனக்கும் - மன்னிப்புக் கேட்கும் அவசியம் உங்களுக்கும் ஏற்பட்டிருக்காது கொஞ்சம் நிதானமாக சைகிளை ஓட்டி இருந்தால் ... கொஞ்சம் துடுக்காக வந்த இளைஞனிடம் ராணி கூறினள்.

கிழவர் திரு திரு வென்று விழித்துக் கொண்டே ராணி வா போகலாம் ... என் பேச்சைக் கேட்க மாட்டாயா என்று கூறி ராணியின் கைகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு நடந்தார்.

ராணி ... நீங்கள் ... என்று வாயெடுத்தான் அந்த இளைஞன் கொஞ்சம்துணிச்சலோடு.

நான் வந்த குடி - வயிற்றுப் பிழைப் பிற்காக வாத்தியார் தொழில் செய்கிறேன்-நேற்றுத் தான் இந்த கபோதிபுரிக்கு மாற்றப் பட்டேன் - என்று கிண்டலாகப் பதில்கூறி விட்டு கிழவருடன் நடந்தாள். அந்த மங்கிய விளக் கொளியில் அவள் முகத்தை ஒரு முறை பார்த்துக் கொண்டான் நீலன்.

கிழவரும் ராணியும் குருகலானதும் - இருண்டு கிடந்தது மான பல தெருக்களைக் கடந்து கொண்டு புதிதாக வாடகைக்கு எடுத்திருந்த வீட்டிற்கு வந்தார்கள். புதிய குடித்தனம் ஆகையால் அறைமுழுதும் சாமான்கள் இறைந்து கிடந்தன. சாப்பாடு முடிந்ததும் கிழவர் சுருட்டைப் பற்ற வைத்துக் கொண்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். ராணி அடுக்களைச் சுத்தம் செய்து விட்டு கிழவருக்கு ஒரு செம்பில் வெந்நீர் எடுத்துக் கொண்டு கூடத்திற்கு வந்தாள்.

ராணி புது இடம் - எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ - எதையும் யோசித்து நடக்கணும் என்று கூறிக் கொண்டே சுருட்டின் புகைக்கு வாய்ச் சிறையிலிருந்து விடுதலை தந்தார்.

'சரி' யென்று ராணி தலையை அசைத்து விட்டுப் படுக்கையை விரித்துப் படுத்தாள். ஏதேதோ எண்ணங்கள் அலைமோத நிலையற்ற மனதுடன் சஞ்சலப் பட்டுக் கொண்டிருந்தாள்.

குற்றம் மனித இயல்பு. அந்தக் குற்றத்தை வெளிப் படையாக ஒப்புக் கொண்டு - மன்னிப்புக் கேட்ப தென்றால் அதுவும் ஒரு பெண்ணிடம், உண்மையில் அந்த இளைஞன் உயரிய பண் புடையவனுகத் தான் இருக்க வேண்டும்.. அவனை மீண்டும் ஒரு முறை சந்தித்தால் ... ! அவளுக்கு ஏற்பட்ட முதல் ஆசை இது ! அவள் முகம் திடிரெனச் சிவந்தது. பழைய நினைவுகள் எல்லாம் மின்னலெனத் தோன்றி மறைந்தது. விழிகளில் நீர் வழிந்து தலையணையை நனைத்துக் கொண்டிருந்தது. எப் பொழுது தூங்கினளோ அவளுக்கே தெரியாது ; அன்றிர வெல்லாம் தணற் புழு வெனப் படுக்கையில் புரண்டு கொண்டிருந்தாள்.

அன்று காலை நீலனின் முகம் தெளி வின்றி காணப்பட்டது. அகத்தின் கண்ணுடி தானே முகம் ! நீலன் எத்தனையோ. அழகிகளைப் பார்த்திருக்கிறான். எழிலரசிகள் பலருடன் பழகும் வாய்ப்பெல்லாம் கிடைத்திருக் கிறது அவன் கல்லூரி வாழ்க் கையில். அப்பொழு தெல் லாம் அழகை தூர நின்று ரசித் திருக்கின்றானே தவிர - காதல் கொண்டதில்லை ; ரோமியோ ஜூலியட், 'லைலா - கயஸ்' 'சலீம் - அனர்கலி' காதல் ஜோடிகளைப் பற்றி எண்ணும் போதும் - படிக்கும் போதும், சில சமயங்களில் நாமும் காதலிப் போமே என்ற ஆசை எழும் ! ஆனல் அந்த ஜோடி களின் திடுக்கிடும் முடிவுஇவனை பயமுறுத்தி வந்தது. காதலும் வேண்டாம் - சாதலும் வேண் டாம் - என்ற விரக்தி மனப் பான்மையில் வாழ்ந்தவன் நீலன், மேலும் கண்டதும் காதல் அவனுக்குக் கசப்பு மருந்து ; இப்படிப் பட்ட நீல னுக்கே அந்தப் பெண்ணின் துணிவான போக்கு சபல புத் தியைக் கொடுத்து விட்டது ; அந்த 'அவர்களின்' சந்திப் பிலிருந்து அவனை ஏதோ ஒரு இன்ப வேதனை புல்லரித்துக் கொண்டிருந்தது. யார் அந்த அழகி இந்த வினவிற்கு விடை காண அவன் இதயம் துடித் துக் கொண்டிருந்தது ... மீண் டும் ஒரு முறை அந்த 'அவளை' சந்தித்தால் ... நீலனும் இந்த முடிவிற்கு வந்தான்.

பல மாதங்கள் நீரிலேயே மிதந்து கொண்டிருந்த கொலம்பஸ் நிலத்தைக் கண்ட தும் துள்ளிக் குதித்தானுமே - அதைப் போல நீலனின் உள் ளம் மகிழ்வால் விரிந்தது. யாரைப் பற்றி - எந்தப் பெண் ணின் முக தரிசனத்திற்காக - இரவு பகல் ஏங்கிக் கிடந்தானே அந்தப்பெண் நிலவு, மலர் கரங் களில் இரண்டொரு ஏடுகளைக் பிடித்துக் கொண்டு - தெரு வழியாக மெல்ல நடந்தாள். அவ்வளவுதான். அறையை விட்டு நீலன் பாய்ந்தான். சே! என்ன ஆட்கள் சமயம் தெரி யாது நடந்து கொள்கின்றனர். அக்கம் பக்கத்து வீட்டுப் பெண் கள் தெரு வழியே செல்லும் அப்புதிய பெண்ணையே பார்த் துக் கொண்டிருந்தனர். பெண் கள் இயல்பே இது தானே - யாராவது ஒரு புதிய பெண் தெரு வழியே சென்றால் போதும் - உடனே அவளைப் பற்றி ஏதாவது- உயர்வாகவோ தாழ்வாகவோ விமர்சனம் செய்யா விட்டால் தூக்கம் பிடிக்காது போலும் !

'புதிதாக மாற்றப் பட்டேன் இந்தக் கபோதி புரிக்கு என்றாளே-ஒரு வேளை அடுத்த தெருவில் இருக்கும் ஆண்டாள் பெண்கள் பள்ளிக்குத் தான் மாற்றப் பட்டிருப்பாளோ ? என்ற ஒரு எண்ணம் திடீரென முளைத்தது நீலனுக்கு. பின் தொடர்ந்து அறிவ தென்ற முடிவிற்கு வந்து விட்டான். சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினன். அவன் நினைத் ததைப் போல ராணி அந்தப் பள்ளிக்குள் தான் நுழைந் தாள். இந்தப் பெரிய கண்டு பிடிப்பிற்குத் தன்னைத் தானே நீலன் புகழ்ந்து கொண்டு மாலை சந்திப்ப தென்ற முடிவுடன் திரும்பி விட்டான்.

மாலை மணி நான்கு அடித்து விட்டது இன்னும் முப்பது நிமிடங்கள் தான் பாக்கி பள்ளி முடிய. அந்த ஒவ்வொரு நிமிடமும்நீலனுக்கு வேதனையைத் தந்து கொண்டிருந்தது. நான் காவது முறையாகத் தலையை வாரி விட்டுக் கொண்டு தெருக் கம்பத்தில் சாய்ந்தபடி நின்றிருந்தான். அவன் விழிகள் அவள் வரும் வழியை ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருந்தன. அதோ ! நீலமணிக் கண்கள் காவியம் பாட- ! நெகிழும் சேலை முன்தானை தென்றலில் ஆட - ராணி - அன்ன நடை போட்டுவந்தாள். கண்களை அகலத் திறந்து கொண்டு நீலன் ராணியை விழுங்கி விடுவதைப் போலப் பார்த்தான். கிட்ட நெருங்கியதும் ராணி நீலனை - நாணத்தோடு நிமிர்ந்து பார்த்தாள். அவள் இதழ்விளிம்பில்இளஞ் சிரிப்புத் தவழ்ந்தது. அவள் சிரித்த முகத்தை நீலன் சிந்தை குளிர ஒரு முறை பார்த்தான். ஏழைப் பெண்களுக்கு ஏன் இத் தனை அழகு ! அப்பப்பா அவள் மேனியிலே தங்கம் ; முகத் திலே நிலாச் சாயம். இதழ் களின் இடுக்கிலே முத்தாரம் ; கழுத்தின் சுருக்கங்கள் - அட டா- ! அதிலே தான் எத்தனை அழகு ! அவள் அசைவெல் லாம் காதல் இசை யெழுப்பிக் கொண்டிருந்தது. அவள் கண் களில் இருந்த பசுமை கண்டு நீலன் குளிர்ச்சியடைந்தான்.

ஏ. கே. வில்வம்

அவள் பேரழகி ; அழகின் கூட்டுச் சரக்கு, பொதுவாக ராணி ஒரு பெண் நிலா! அந்தத் தெருவிலே அவள் நடந்து செல் வது அழகு ஊர்வலம் நடை பெறுவதைப் போல் இருந்தது. நீலன் உமிழ் நீரை விழுங்கிக் கொண்டான். சுற்றும் முற் றும் ஒரு முறை பார்த்தான். தைரியத்தை வர வழைத்துக் கொண்டு 'ராணி ... உன் கையில் இருப்பது"

"காண்டேகரின் கருகிய மொட்டு ..." மேலும் என்ன பேசுவதென்றே தெரிய வில்லை நீலனுக்கு ... தடுமாறினன் ...

'ஏன் கொடுத்து விட்டுப்

போகவா ... அவளே வலிந்து கேட்டாள்.

நீலனை வெட்கம் பிய்த்துத் தின்றது. சமாளித்துக் கொண்டு ... ஆமாம் ராணி கொடுத்து விட்டுப் போ ... நாளை நீ வரும் போது திருப்பித் தருகிறேன் - என்றான். எத்தனையோ முறை படித்திருக்கிறான் அதே நாவலை. இருந்தாலும் அவளுடன் பேச வேறு வழி : இந்த நாவல் தானே ; 'வாழ்க' காண்டேகர் என்று மனதில் கூறிக் கொண்டே அந்த நாவலைப் பெற்றுக் கொண்டான்.

'நீலா - நீலா என்று ஒரு குரல் வீட்டிலிருந்து கிளம்பியது இவனும் வந்தான் - அவளும் போனாள் - விட்டுப் பிரிய மனமின்றி ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்தனர். நான்கு வழிகள் ! அவைகளுக்கு அந்த நேரத்தில் மட்டும் வாய் இருந்தால் எத்தனையோ காவியம் தீட்டியிருக்கும்.

நீலன் ராணி காதல் இப்படி வளர்ந்தது. நாவல் பரிமாற்றத்தில் ஆரம்பித்து 'மானே-மயிலே' என்று காதல் கடிதங்கள் கைமாற ஆரம்பித்தன. இரு முகாமலிருந்தும் கடிதங்கள் பறக்குமளவிற்கு அவர்கள் காதல் பிணைப்பு வலுப் பெற்றது.

இத்தனை நாட்கள் ஓய்ந்திருந்த உடல் உணர்ச்சிகள் - உத்வேகமாகக் கிளம்பிற்று ; அவள் நரம்புகளில் ஒரு முறுக்கு - மேனியில் ஒரு பொலிவு ! நடை, உடை, களில் ஒரு புது மாற்றம் காணப் பட்டது. இடிந்து போன இன்பக் கோட்டைகளை எழிலுரச் செய்வான் - இது ராணியின் நம்பிக்கை. அவனையும் அறியாமல் - தன் நிலைமையும் உணராமல் ராணி தன் இதயத்தில் நீலனுக்கு இடமளித்து விட்டாள்.

கதிரவன் தோன்றத் தவறினாலும்நீலன்ராணியைச் சந்திப்பதை மறக்க மாட்டான். தினம் தினம் - சந்திப்பார்கள் - நிறைய நிறையப் பேசுவார்கள். "மலர்களிடை நீ ஒரு ரோஜா நட்சத்திரங் களிடையே நீ ஒரு குளிர் நிலவு - பெண்களிடையே - நீ ஒரு பேரழகி ! நீலன் ராணியை இப்படியெல்லாம் வர்ணிப்பான் : அவள் வெட்கித் தலை குனியும் அளவிற்குச் சில நாட்களில் இரவு நெடு நேரம் வரை பேசிக் கொண்டிருப் பார்கள். மாந்தோப்பு - மலர் வனம் - நதியோரம் இப்படிப் பலபல இடங்களில் அவர்களின் சந்திப்பு நடைபெறும். பேசிக்கொண்டே இருப்பாள் ராணி ! திடீரென அவள் முகம் மாறும். எதையோ நினைத்துக் கவலைப்படுபவளைப்போலக் காட்சியளிப்பாள். ஆனால் நீலனுக்கு ஒன்றும் விளங்க வில்லை. ஏதோ ஒரு கவலை ராணியை அரித்துக் கொண்டிருக்கிறது என்பதை மட்டும்முடிவு செய்திருந்தான் காரணம் கேட்பான் நீலன் - கண்களில் நீர் கொப்பளிக்கும் காரிகைக்கு. வேண்டாமென்று விட்டு விட்டு வேறு பேச்சைத் தொடங்குவான் ; இப்படி நாட்கள் சில உருண்டன.

'படியாய்க்கிடந்து உன்பவள வாய் காண்பேனே ! அவன் பாடுவான் சதா ராணியின் நினைவுதான் நீலனுக்கு. எத்தனை நாள் பொறுப்பது ; கண் முன் தொங்கும் திராட்சைக் குலை - உதட்டில் சொட்டும் தேன் ... சுவைக்காமல் கிடப்பதா நீலன் ராணியைத்தன் உள் ளக்கோவிலின் அழகுத் தெய்வமாகவைத்துவிட்டான்; அவளை எப்படியும் தன் வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொள்ள முடிவு செய்தான் ; அந்த முடிவை அன்று சொல்லி விடவும் தீர்மானித்தான்.

அன்றிரவு ! விழி அள்ளும் அழகு நிலா ! அதைச் சுற்றிலும் பூத்துக் கிடந்த வைரப் பூக்கள் ! ஆற்றங்கரையோரம் காதல் சந்திப்பிற் கேற்ற அற்புதமான இடம். எல்லாம் அழகுச் சூழ்நிலை. நீலன் ராணிக்காக நெடுநேரம் காத்திருந்தான்; அதோ வந்து விட்டாள் அவன் ஆசைக் குரியவள் ! நீலன் அவளை அள்ளி அணைத்துக் கொண்டான். ஆகா ! அந்த அழகான நிலவு ஒளியில் வனப்பான யுவதி - வசீகர பிங்க வாலிபன். இருவரும் ... அமைதி - நிலா மேகத்துள் மறைந்து கொண்டது. கொஞ்ச நேரந்தான். மீண்டும் நிலா எட்டிப்பார்த்தது ......

'ராணி ... என்றான் ஆசையெல்லாம் ஒன்று கூட்டி ...

ராணி நிமிர்ந்து பார்த்தாள். அவள் முகத்தில் ஒரு சோர்வு அதே சமயத்தில் ஒரு திருப்தி காணப்பட்டது.

'நம் காதல் முற்றி விட்டது. ராணி சொன்னாள் !

'ஆம் அதோ அந்த நிலவைப் போல ... ...

ராணி இப்பொழுது பேச வில்லை ஒரு பெரும் மூச்சை மட்டும் பதிலாக்கினாள் !.

ராணியின் மெல்லிய விரல்கள் நீலனின் மார்பை வருடிக் கொண்டிருந்தன ; என்றும் என்னைக் கைவிட மாட்டீர் களே ... ராணி நம்பிக்கையோடு கேட்டாள்

என்ன ராணி இன்னுமா நம்பவில்லை ... என் ஆவியை உனக்குக் காக்கி விட்டேன் ... ! என்று ஆர்வத்துடன் நீலன் கூறினான்.

"இந்த உறுதி ... ! ராணி கேட்டாள்"

"உலகம் உள்ளவரை ... இல்லை இல்லை என் உயிர் உள்ள வரை ...... !நீலன் பதில் இது!

அவள் மார்பகத்தில் சாய்ந்த படியே வானத்தை நோக்கிக் கொண்டிருந்தான் நீலன் ......

வானத்தில் என்ன பார்க்கிறீர்கள் ... ...

நிலவைப் பார்க்கிறேன் ... இவ்வளவு அழகான நிலவில் களங்கம் ஏன் இருக்கிறது என்று சிந்திக்கிறேன் ... என்றான் நீலன் ; திடீரென ராணியின் முகம் மாறிற்று. அவள் கண்கள் கலங்கி விட்டன.

" ராணி ... என் அழுகிறாய் நீலன் ராணியின் தோள்களை மெல்லப் பிடித்துக் குலுக்கிய வாறு கேட்டான். அவள் குரல் கரகரத்தது ; இதழ்கள் துடித்தது. நெஞ்சு பட பட வென்று அடித்துக் கொண்டது.

நான் ...! நான் ... துக்கம் கொப்பளித்துக் கொண்டு வந்தது ...

"ராணி விளக்கமாகச் சொல் என் வேதனையை வளர்த்தாதே ...

'' அன்பரே ... நான் மணமானவள் ... ''

'என்ன சொல்கிறாய் ராணி'

ஆம் ! நான் மாற்றான் மனைவிதான் - மனமொப்பா ஒருவரை என் பெற்றோர்கள் மணமுடித்து விட்டார்கள் ... விட்டிலிருக்கிறாரே என் தாத்தா... அவர் வயது தான் என் கணவரின் வயதும் ... இன்னும் உயிரோடு தான் இருக்கிறார் ... நான் ... நான் ... அவள் அழுதாள்.

நீலனால் ஒன்றும் பேச முடியவில்லை அவன் அழுதான் "மணமானவள் ... என் இதய ராணி மாற்றான் மனைவியா ... அய்யய்யோ ! " நீலன் பித்தம் பிடித்தவன் போல் ஆனான் ; ஆயிரம் ஈட்டிகள் அவன் விலாவைக் குத்துவது போல் இருந்தது. எழுந்தான் தலை கால் தெரியாமல் நடந்தான் ... எங்கு போகிறான் ... ! அவனுக்கே தெரியாது....

ராணி நடைப் பிணமானாள் எப்படியோ எழுந்தாள் ... வீடு வந்து சேர்ந்தாள் ; ஆயிரம் முறை சோகத்திற்குக் காரணம் கேட்டார் 'தாத்தா' -- எதை அவரிடம் சொல்லுவது ; வேதனை நெஞ்சை அரித்தது துக்கம் -- கதறலாக வெளிப் பட்டது ; அவளுக்கு ஏற்பட்ட இந்தப் பெரிய ஏமாற்றத்தை எண்ணி எண்ணிக் கண்ணீர் விட்டாள். இவளுக்கு மட்டுமா நீலனுக்கும்இந்தச் சம்பவம்ஒரு பெரிய ஏமாற்றம் தானே !

மறு நாட்காலை சோகமே ஓர் உருவாய் வீட்டு வாயில் நின்று கொண்டிருந்தாள் ராணி ! தேவதாஸ் சினிமாப் பட விளம்பர வண்டி தெரு வழியே சென்று கொண்டிருந்தது. அவள் கண்களில் இருந்து இரண்டு துளிக் கண்ணீர் கன்னங்களை நனைத்துக் கொண்டு அவள் கழுத்துச் சுருக்கத்தில் போய் ஒளிந்து கொண்டது.

அச்சகத்தினர் பார்வைக்கு

30-10-54 உ இதழில் இருந்து தென்றலில் உபயோகப் படுத்தப் படும் எழுத்துக்கள் அனைத்துமே நார்ட்டன் & கம்பெனியார் தயாரித்தவை. அழகிய புதுமை நிறைந்த தமிழ் ஆங்கில எழுத்துக்களைத் தயாரிப்பவர்

நார்ட்டன் & கம்பெனி

1-16 பேக்கர் திருவேங்கட முதலி தெரு,
சூளை. சென்னை - 7.

ஜனவரி 15உ முதல்

திரை

[வெள்ளித்திரை ஏடு]

பெரிய அளவில் ஏராளமான பக்கங்களுடன் !
திங்கள் ஒருமுறை - தித்திக்கும் 'திரை' !
பிரமிப்புத்தரும் அளவு படங்கள் !
இதுவரை இப்படியொரு பத்திரிகை வந்ததில்லை !

தனி இதழ் அணு 4.

பிரதியொன்றுக்கு 8 அணு விதம் முன்பணம் கட்டக்கூடிய நாணயமான ஏஜண்டுகள்

எழுதுக :

நிர்வாகி : 'திரை'
13, நல்லண்ண முதலி சந்து,
சென்னை-14.

இது ஒரு 'தென்றல்' வெளியீடு

சாமிநாதன், சேலூர்

உருத்திரங்கண்ணனார் என்பவர் யார்? எக்காலத்தைச் சார்ந்தவர்?

இவர் சங்ககாலப் புலவர்களில் ஒருவர். இவரைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் என்பவர். பத்துப்பாட்டில் தொண்டைமானிளந்திரையன் பொருட்டுப் பெரும்பாணாறு பாடியவர். இது இளந்திரையன் நாட்டின் வளத்தையும் அவன் கொடைத் திறனையும் புகழும் நூல்.

தமிழ்த்தம்பி, சென்னை

'பாயிரம்' என்றால் என்ன ?

பாயிரம் என்பது நூலிலடங்கிய பொருளை முன்னே கூறுதல். அது பொதுப்பாயிரம் சிறப்புப் பாயிரம் என இருவகைப்படும். பொதுப் பாயிரம் என்பது நூலினது வரலாறும் ஆசிரியன் வரலாறும், ஆசிரியன் பாடங்கூறும் வரலாறும் கூறுவது: சிறப்புப்பாயிரம் நூலாசிரியன் பெயர்-நூல் வந்த வழி-நூல் வழங்கும் எல்லை-நூலின் பெயர்-யாப்பு-பொருள்-நூற்பயன் முதலியன கூறுவது.

நீலன், வண்ணை

'வஞ்சப் புகழ்ச்சி' 'புகழாப் புகழ்ச்சி' இரண்டிற்கும் பொருள் கூறு.

இரண்டிற்கும் பொருள் ஒன்று தான். இது பழித்தாற்போலும் பாகுபாட்டால் ஒன்றிற்கு மேம்பாடு தோன்ற வுரைப்பது என்று பொருள் படும்.

ஆறங்கசாமி, திருச்சி

தென்றலாரே! இதோ ஒரு கேள்வி. உடனே பதில் கூறுங்கள் பார்ப்போம் !

"காவிரியைச் சோணாடைக் காவலர் தம் மரபை நாவலரைக் காவலரை-நல்லோரை - பூவலய முள்ளத்தகும் புதுவையூரைச் சிறப்பித்தான்" யார் ? இவன் எப்படி மாண்டான் ?

இப்படிப்பாராட்டப் பட்டவன் புதுவைச் சேதிராயன் என்பவன். இவன் வெண்ணைச் சடையன் மகன். கம்பர் இராமாயணம் அரங்கேற்றியபோது உடனிருந்து கேட்டாராம். அப்பொழுது பாம்பொன்றால் தீண்டப்பட்டு மரணமடைந்தான் என்று கூறப்படுகிறது. போதுமா பதில் ?

தொல்காப்பியன், சென்னை

'வினை முதல் விளக்கணி' பொருள் தருக !

ஒரு கருத்தாவைச்சேர்ந்த முறையுள்ள பல செய்கைகளை முறை பிறழாமல் சொல்லுதல் என்று பொருள் படும்.

பொன்னம்பலம், புரசை

பழைய நூல்களில் **விறலி** *என்ற சொல் காணப்படுகிறதே அது யாரைக் குறிக்கிறது ? ஏன் !*

எண் வகைச் சுவையும் மனத்தின் கண்பட்ட குறிப்புகளும், புறத்துப் போந்து புலப்பட ஆடுதல் விறல் எனப்படும். அதனை யாடுபவள் விறலி எனப்பட்டாள்.

ந. சுந்தரம்,

''ஆயிரம்தீவு அங்கயற்கண்ணி'' முதல் அத்தியாயத்தில் 'கொடியில் முளைத்த கத்தரிக்காய் போல்' என்று எழுதியிருக்கிறீர்கள். கத்தரிக்காய் கொடியிலா காய்க்கிறது ! வியப்பு !

இதிலென்ன வியப்பு ! கொடிக் கத்தரிக்காய் என்றே ஒரு ரகம் உண்டே !

மணிவேலன், திருவாங்கூர்

'பெருநாரை' என்பது என்ன ?

'பெரிய நாரை' என்று எண்ணி விடப்போகிறீர் ஐயா ! அது முதல் சங்கத்தவர் இயற்றிய ஒரு இசைத் தமிழ் நூல் !

தென்றலில் 'கட்டபொம்மன்' தொடர் நாடகம் எழுதிய சிலம்பீன் செல்வன் என்பவர் யார் ? அவர் உண்மைப் பெயர் என்ன ?

சிலம்பீன் செல்வன் என்பவர் கோயம்புத்தூரைச் சேர்ந்தவர். அவர் உண்மைப் பெயர் இளங்கோவன் என்பதாகும்.

வீரன், வேலம்பாடி

வாழத் தகுதியுடையவர்கள் யார் ?

சாவதற்கு அஞ்சாதவர்கள் !

நக்கீரன், மதுரை

'அகம்' என்றால் என்ன ? எத்தனை பொருள் படும். சிலவற்றைப் பொருத்திக்காட்டுக !

அகம் என்ற சொல்லுக்கு 'இடம்' 'மனம்' 'மார்பு' 'வீடு' அகங்காரம் அல்லது கர்வம் இப்படிப் பல பொருள் உண்டு. படிப்பகங்கள் நாடெங்கும் பெருகி வருகின்றன. அண்ணாவின் அகம் தூய்மையானது. போர் என்றால் செங்குட்டுவனின் முகம் சிவக்கும் அகம் விரியும் என் அகம் நாடிவந்தோர் வெறுங்கையுடன் திரும்பியதில்லை. ஆச்சாரியார் அகம் பிடித்தலைகிறார். இந்த ஐந்து வரிகளில் வருகின்ற ஐந்து 'அகமும்' ஐந்து வேறு பொருள்களைத் தரும்.

தென்றல்

பொங்கல்மலர்

விலை எட்டணா

உங்களூர் ஏஜண்டிடம்

பதிவுசெய்து

கொள்ளுங்கள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

5 வராகனெடை பெருங் காயத்தை மூன்று ஆழாக்கு நீரில் நன்றாய் அரைக்க அது வெண்ணிறமுள்ள கனத்திரவமாகும். இதில் கால்—அரை பலம் எடுத்து அதிசார சந்நிபாதசுரம், ஊழிநோய் வலி, குழந்தைகட்குண்டாகும் மாந்தநோய் முதலியவைகட்கு ஆசனத்துட் செலுத்தலாம்,

இதை நீர்விட்டு உரைத்து மார்பின்மீது பற்றிட, குழந்தைகட்குண்டாகும் கக்குவான் குணப்படும்.

குழந்தைகள் வயிற்றிலுண்டாகும் பூச்சிகளை வெளிப்படுத்த இதன் திரவத்தை ஆசன வழியாய்ச் செலுத்தலாம்.

அபினும் காயமும் சேர்த்துச் சொத்தைப் பல்லில் வைக்க, வலி சாந்தப்படும்.

பிரசவத்தின் பின் அழுக்கை வெளிப்படுத்த, காயத்தைப் பொரித்து, வெள்ளைப்பூண்டு, பனை வெல்லத்துடன் சேர்த்துக் காலை தோறும் கொடுக்கலாம்.

காயம், கர்ப்பூரம், மிளகு, அபின் சேர்ந்த மருந்து ஆரம்ப ஊழியில் நன்மை தரும்.

ஒற்றைத்தலைவலி, பல்வலிகளில் இதை உபயோகிக்கலாம்.

பெருங்காய லேகியம்:—காயம் 25 பலத்தைத் தூணி நீரில் சேர்த்து எட்டுல் ஒன்றாய்க் காய்ச்சிப் பத்து பலம் சீனி கலந்து பாகு செய்து, பூண்டு, கடுகு, மிளகு, சுக்கு வகைக்கு ஒரு பலம் பொடி செய்து தூவி, கால்படி ஆவின் நெய்விட்டு இலேகிய பதமாய்க் கிண்டி, வேளையொன்றுக்கு 5 குன்றி முதல் 20 குன்றி கொடுக்க, வாயு, வாந்தி நோய்கள் தீரும்.

பொரித்த காயம், சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு இவைகளைச் சம வெடை தூக்கிச் சூரணஞ் செய்து 5-10 குன்றி எடை சோறுண்ணும் பொழுது முதற்பிடியன்னத்துடன் சேர்த்துண்டுவர, மந்தத்தை விலக்கிஜ பசியையும் சீரணத்தையுமுண்டாக்குவதுடன் வயிற்றுப் பிசம் முதசுயவற்றையும் போக்கும்.

கோழிமுட்டை மஞ்சட்கருவுடன் காயத்தைக் கூட்டிக் கொடுக்க வறட்டிருமல், பக்கவலி நீங்கும்.

வாலேந்திரபோளம், மிளகு, இவைகளுடன் சேர்த்துக் கொடுக்க உதிரச் சிக்கல் அறும்.

எண்ணெயிலிட்டுக் காய்ச்சிக் காதுக்கிட காதுவலி நீங்கும்.

ரூதகசந்நி, வலி, மூர்ச்சை இவைகட்கு இதன் திரவம் உடலே பலன் தரும்.

கால் ஆழாக்கு நீரில் அரை வராகனெடை காயத்தைக் கரைத்து, ஒரு சங்களயு எடுத்துச் சிறிது ஓமத்திநீர் சேர்த்துக் கொடுக்கக் குழந்தைகளுக்குண்டாகும் மாந்தம், வயிற்றுப் பொருமல் அனுகூலப்படும்.

காயத்துடன் உழுந்து சேர்த்துப் பொடித்துத் தியிளிட்டுப் புகைத்த புகையையுட் செலுத்த சுவாசம் (இரைப்பு உப்பிசம்) தணியும்.

காயத்தை நீர் விட்டரைத்துத் தேள் கடிவிடம், புடைகள் முதலியவற்றிற்குப் பூசலாம்.

ஒரு அறிவிப்பு!

தென்றலில் தொடர் சித்திரங்கள் பலவற்றை நானே எழுதி வருகிறேன். தொடர்ந்து சுற்றுப் பயணங்கள் இருப்பதால் எல்லா தொடர் சித்திரங்களையும் வாரா வாரம் எழுதுவதில் சிரமம் எற்படுகிறது. எனவே அடுத்த இதழ் முதல் பெரும்பயணம் *ஒரு இதழ் விட்டு ஒரு இதழில் இடம் பெறும். மற்றும் தென்றலில் சுவை மிக்கவை என்று நீங்கள் கருதும் பகுதிகளும் அளவில் குறைந்தாலும் தொடர்ந்து வெளி வரும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அன்புள்ள,
கண்ணதாசன்

ஒரு பத்திரிகையில் இரண்டு விளம்பரங்கள் பிரசுரமாயின. சுவையான விளம்பரங்கள் தான் !

'நான் ரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தில் காத்திருந்த போது, எனது டிரஸ்கள், மணிப்பர்ஸ் பவுண்டன் பேனா முதலியன வைத்திருந்த ஸூட் கேஸைத் திருடிச் சென்ற பேர்வழி யார் என்பது புரிந்து விட்டது. அந்த நபரே அவற்றை எனது விலாசத்தில் கொண்டு வந்து கொடுத்து விடுவார் என எதிர் பார்க்கிறோம். தவறினால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். இது முதல் விளம்பரம்.

இதற்கு பதிலாக வெளியான இரண்டாவது விளம்பரம் இது தான் : 'அடையாளம் கண்டு பிடிக்கப்பட்ட அன்பர், குறிப்பிட்ட சாமான்களுடன் ஸூட் கேஸை உரிய நபரிடம் ஒப்புவிக்கத் தயாராக யிருக்கிறார். சொந்தக்காரர் எந்த நேரத்திலும் வந்து பெற்றுக் கொள்ளலாம்.'

இரண்டாவது விளம்பரத்தில் விலாசம் தரப்படவில்லை என்பது சொல்லாமலே புரிந்திருக்க வேண்டிய விஷயம்.

★

ஒரு எழுத்தாளர் ஆபாசமாக எழுதியிருக்கிறார் என்று குற்றம் சாட்டப்பட்டு நீதிபதி முன் நின்றார். "என்ன, நீர் குற்றவாளி தானா ?" என்று கேட்டார் நீதிபதி.

'அப்படி நான் என்னத்தை எழுதி விட்டேன் ! சுப்ரதீபம் போல் வர்ணனை பண்ணவில்லை ; கம்பனைப் போல காமரசம் நிறைந்திருக்கும் படி எழுத வில்லை. வாத்ஸ்யாயனைப் போல் ......' என்று அடுக்கிக் கொண்டு போனார் எழுத்தாளர்.

'போதும் நிறுத்தும்! உமக்கு இரு நூறு ரூபாய் அபராதம். கட்டத் தவறினால் ஒரு மாதம் ஜெயில் !' என்று தீர்ப்புக் கூறிய நீதிபதி, போலீஸ் அதிகாரியிடம் ரகசியமாகச் சொன்னார், 'அவர் சொன்ன ஆசாமிகளையும் அரெஸ்ட் செய்து கொண்டு வாரும். அவர்களும் இந்தப் பேர் வழியை விட மோசமாக எழுதியிருப்பார்கள் என்றல்லவா தோன்றுகிறது !' என்று.

தந்தி: "ராஜா". போன் 268

அவன் கவலை :

★

காயஸ் என்ற ரோமாபுரி மன்னனுக்கு மூன்று மனைவியர் ஒவ்வொரு மனைவிக்கு அவர்கள் சுமக்க முடியாத அளவிற்கு நகைகளைப்பூட்டி இருந்தான். ஒரு நாள் வேறு நாட்டரண்மனையில் நடந்த விருந்தின் போது-அந்த அரசன் தன் மனைவி அணிந்திருந்த நகைகளைப் பற்றியும் விலையுயர்ந்த ஆபரணங்களைப்பற்றியும் பெருமையாகப் பேசினான். காயசிற்குப் பொறுக்கவில்லை. வேகமாக நாடு திரும்பினான். ஒரு கப்பல் தமிழ் நாட்டு பொன்னை-தலையிலிருந்து கால்வரை நகைகளாகவே செய்து மூன்று மனைவியருக்கும் பூட்ட முடியாமல் பூட்டி-மகிழ்ந்தானாம். என்றாலும் அவனுக்கு ஒரு கவலை. பொன்னை மட்டும்தானே பூட்டியிருக்கிறோம் - வைரத்தையும் முத்தையும் எங்கே அணிவிப்பது என்று கவலையடைந்தானாம் !

உயர்ந்த-நாணயமான - நகைகளுக்குச்சிறந்த இடம் பி. ஏ. ராஜு செட்டியார் சுவர்ண மாளிகை !

வைரம், தங்கம், வெள்ளி நகைகள் நாணயத்தோடும் நம்பிக்கையோடும் என்றும் கிடைக்கும் இடம்....

Anand...

பி.ஏ.ராஜு செட்டியார் & பிரதர்.

சுவர்ணமாளிகை.. கோயமுத்தூர்.

Edited and Published by Kannadasan, 13, Nallanna Mudali Lane, Madras-14. Printed by R. M. Kanagasabapathy at Elangovan Printers, 23, Muku Mutdali St., Madras-14.